Registered as a news paper.
பக்கங்கள்: பத்து
விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

விரைவாகவும், துல்லியமாகவும்
உங்கள் இல்லங்களிலிருந்து
உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTERNET
மூலம் தொடர்பு கொள்ள
இலங்கை முழுவதும் 24 மணிநேரத்தில்
துரித தபால் / பொதிகள் சேவை
Sri Murugan
Tele Communication & Agency Post Office
303.K.K.S ROAD, JAFFNA.T.P- 021-222 2670,
FAX-222 3214. email-del-smskr@eureka.lk

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆனி 26 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 அவ்வல் 10 (11.07.2003) வெள்ளிக்கிழமை இதழ்: 282

# கூட்டமைப்பு எம்.பிக்களின் சாரதிகளால் பொ.ஐ.மு. உறுப்பினர்கள் தாக்கப்படலாம்

## ஜனாதிபதி சந்திரிகா எச்சரிக்கிறார்

(கொழும்பு)

**பொதுஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு, தமிழ் கூட்டமைப்பு எம்.பிக்களின் சாரதிகளால் அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாக, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

பொதுஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு பேசிய போதே - ஜனாதிபதி இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

நாடாளுமன்றத்துக்கு வந்துசெல்லும்போதும் அல்லது வீதிகளில் நடமாடும்போதும் புலிகள், பொ.ஐ.மு. எம்.பிக்கள் மீது தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது என்றும்,

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாகனச் சாரதிகளால் அல்லது அவர்களுக்கு நெருங்கியவர்களால் இந்த மரண அச்சுறுத்தல் ஏற்படும் எனத் தமக்குத் தகவல் கிடைத்திருப்பதாகவும், ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

## அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க தனது பதவியைத் துறந்தார்!

### ஏற்க பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மறுப்பு

விவசாய, சமுர்த்தி விவகார அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க தனது பதவியை நேற்று திடீரென இராஜினாமா செய்தார். எனினும், இவரின் இராஜினாமாவை பிரதமர் ரணில் இதுவரை ஏற்றுக்கொள்ளவில்லை.

உர இறக்குமதியொன்று தொடர்பாக, அமைச்சர் திஸநாயக்க சில கொடுப்பனவுக் கணக்குகளை சமர்ப்பிக்க வேண்டுமென திறைசேரியின் செயலர் சரித்த ரத்தவத்த கோரியிருந்ததாகவும், இதற்கு ஆட்சேபணை தெரிவித்தே அமைச்சர் பதவி துறந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால்- சமரச முயற்சியாக, அமைச்சர் பீரிஸ், எஸ்.பி.திஸநாயக்கவின் வீடு சென்று, பதவி ராஜினா

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி கூற்றை ஆட்சேபித்து தமிழ்க் கூட்டமைப்பு போர்க்கொடி

தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர்- விடுதலைப் புலிகளை தமது சாரதிகளாக பாவித்து, எதிர்க்கட்சி உறுப்பினர்களைக் கொல்லச் சதிசெய்வதாக, ஜனாதிபதி சந்திரிகா வெளியிட்ட கருத்துக்கு, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கடும் ஆட்சேபணையைத் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக- இன்று நாடாளுமன்றத்தில் தமது சார்பாக அறிக்கை ஒன்றை வெளியிட சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேராவிடம் கூட்டமைப்பினர் அனுமதி கேட்டுள்ளனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி பொதுச்செயலர் இரா.சம்பந்தன், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் விநாயகமூர்த்தி, நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர், நேற்று சபாநாயகரை இது தொடர்பாகச் சந்தித்துப் பேசினர். சபாநாயகர் தமக்கு அனுமதி தருவார் என்ற நம்பிக்கை உள்ளதாகக் கூட்டமைப்பினர் தெரிவித்தனர்.

'எமக்கு எதிராக கூறிய குற்றச்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பாடசாலை மாணவரை வைத்து பேக்கரியில் ஆபாசப் படப்பிடிப்பு

### விடுதலைப்புலிகள் விசாரணை

மட்டக்களப்பு நகரில் - கமரா மூலம் ஆபாசப்படம் பிடிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட பேக்கரி ஒன்றினை, விடுதலைப் புலிகளின் அரசியற் துறையினர் நேற்று சீல் வைத்து மூடியுள்ளதுடன், அங்கு வைத்துப் பிடிக்கப்பட்ட படங்களையும் கைப்பற்றியுள்ளனர்.

படம் பிடிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட கமராவும் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், படப்பிடிப்பாளரையும் விடுதலைப் புலிகள் விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

மட்டக்களப்பு பாடசாலை ஒன்றில், க.பொ.த சாதாரண தரத்தில் கல்வி பயிலும் மாணவி ஒருத்தியும் பிறிதொரு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் ராணுவ ட்ரக் வண்டி புலிகளால் படையினரிடம் ஒப்படைப்பு



திருமலையில் கடந்த வருட இறுதியில், ஆறு படையினருடன் தம்மால் கைப்பற்றப்பட்ட இராணுவ ட்ரக் வண்டி ஒன்றை, விடுதலைப் புலிகள் நேற்று படையினரிடம் மீள ஒப்படைத்தனர்.

நேற்று மதியம், நிலாவெளியிலுள்ள வில்கம் விகாரைப்பகுதியின் சூனியப் பிரதேசத்தில் வைத்து இந்த ட்ரக் வண்டி இராணுவத்திடம் புலிகளால் ஒப்படைக்கப்பட்டது. புலிகளின் குச்சவெளி இராணுவப் பொறுப்பாளர் ஈகன், கண்காணிப்புக் குழுவினர் முன்னிலையில் வைத்து

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வேலணை மின்வேலி விவகாரம் மனித உரிமைக் குழு விசாரணை

வேலணை ஐயனார் வித்தியாலய மாணவன் - படையினரின் மின்வேலியில் மின்சாரத் தாக்குதலுக்குட்பட்ட சம்பவம் குறித்து, மனித உரிமைகள் ஆணைக்குழு தனது விசாரணையை ஆரம்பித்திருக்கிறது.

மேற்படி சம்பவம் குறித்து - சிறுவர் பாதுகாப்பு நிதியம், மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு ஒன்றைச் செய்திருந்தது.

இம்முறைப்பாட்டைத் தொடர்ந்தே, மனித உரிமைகள் ஆணைக்குழு தனது விசாரணைகளை ஆரம்பித்திருக்கிறது.

இவ் விசாரணைகளின் முதற் கட்டமாக யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள், சம்பவம நடைபெற்ற இடத்துக்கு நேற்று நேரடியாக விஜயம் செய்தனர்.

குறிப்பிட்ட கடற்படை முகாமின் பொறுப்பதிகாரியிடமிருந்து மேற்படி சம்பவம் தொடர்பாக அறிக்கை ஒன்றை மனித உரிமைகள் ஆணைக் குழு கோரியுள்ளது.

அத்துடன், குறிப்பிட்ட பாடசாலை அதிபரிடமிருந்தும் வாக்கு மூலம் பெறப்பட்டிருக்கிறது. (க)

## இடைக்கால நிர்வாகத்தை எதிர்த்து நாடாளுமன்றில் நேற்று பிரேரணை!

### ஜே.வி.பி. முன்வைத்தது

(கொழும்பு)


வடக்கு - கிழக்குப் பகுதிகளில் இடைக்கால நிர்வாகசபையை அரசு ஏற்படுத்தக்கூடாது என்றுகோரி- மக்கள் விடுதலை முன்னணி, நாடாளுமன்றத்தில் ஒத்திவைப்புப் பிரேரணை ஒன்றை நேற்று சமர்ப்பித்தது.

மக்கள் விடுதலை முன்னணியின் சார்பில், அதன் பிரசார செயலாளர் விமல் வீரவன்ச, நேற்று இப் பிரேரணையைச் சமர்ப்பித்து உரை நிகழ்த்தினார்.

விடுதலைப் புலிகள் மீண்டும் யுத்தத்துக்குத் தயாராகி வருகின்றனர். வடக்கு - கிழக்குப் பகுதிகளில் புலிகள் தொடர்ச்சியாகப் பல கொலைச் சம்பவங்களில் ஈடுபட்டு வருகின்றனர். எனவே, வட- கிழக்கில் இடைக்கால நிர்வாகத்தை வழங்கினால், அது தனியரசைப் புலிகளுக்கு வழங்கியமைக்குச் சமனாகும்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



அம்மையாரைத் தவிர, உப்பிடிக் கற்பனை வளம் கொழும்பில் எவருக்கும் இருக்காது...!

## இராணுவப் புலனாய்வாளருக்கு புலிகளால் மரண அச்சுறுத்தலா?

### தான் கூறவில்லை என மறுக்கிறார் அமரதுங்க

கொழும்பிலுள்ள இராணுவப் புலனாய்வுத்துறை அதிகாரிகளுக்கு, விடுதலைப் புலிகளால் மரண அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாகத் தான் கூறவில்லை என்றும், இவ்வாறு வெளியான செய்திகள் தவறானது என்றும் உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அமைச்சர் ஜோன் அமரதுங்க மேலும் தெரிவிக்கையில் - தெஹிவளை பொலிஸ் நிலையக் குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி சுனில் தாப்ரூ கொலைசெய்யப்பட்டதற்கு, அரசாங்கத்தின் பாதுகாப்புக் குறைபாடுகளே காரணம் என்று தான் தெரிவித்ததாக வெளியான செய்தியும் தவறானதென மறுத்தார்.

அத்துடன், புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் நடைபெறும் சம்பவங்களில் அரசு தலையிடாது என்று தெரிவித்த கூற்றும் திரிபுபடுத்தப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

EXPO Aviation
எக்ஸ்போ
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 071 349999
071 348888 074 ~ 512666 ~ 01 ~ 360290
(சி -975)

# நல்லூர் உற்சவகால ஒழுங்கு மாநகர சபையில் ஆராய்வு

(வண்ணை)

எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்ப மாகி, 29 ஆம் திகதிவரை நடை பெறவுள்ள, நல்லூர் கந்தசுவாமி கோயில் மகோற்சவகால விசேட ஒழுங்குகள் சம்பந்தமான கூட்டம் - நேற்று மாலை மாநகரசபையில், ஆணையாளர் இராமலிங்கம் தலை மையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் - வடபிராந்திய போக்குவரத்துச் சபை, மின்சார சபை, சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினர், மக்கள் நலன்புரிச் சங் கத்தினர், மக்கள் சேவைச் சங்கம், இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகளோடு விடுதலைப் புலிகளின் உறுப்பினர்க ளும் மாநகரசபை அதிகாரிகளும் கலந்துகொண்டனர். இந்தக் கூட்டத்தில் பொலிஸார் கலந்து கொள்ளவில்லை.


இக்கூட்டத்தில் பின்வரும் தீர்மா னங்கள் மேற்கொள்ளப்பட்டன.

வழமைபோன்று, அதிகாலை 3 மணிமுதல் இரவு 9 மணிவரை வீதித்தடைகள் அமுலில் இருக்கும். விசேட திருவிழாக்களின்போது இவற்றில் மாற்றம் செய்யப்படும். பஸ்கள் ஆனைப்பந்தி - நாவலர் வீதியூடாகச் செல்லும்.

ஆலய வீதிகளில் வசிப்போ ருக்கு, வெவ்வேறு நிறங்களில் பாஸ் வழங்கப்படும். குறிப்பிட்ட பாஸ் மூலம் அந்தந்தத் தடைமுகாம்கள் ஊடாகவே பயணிக்கமுடியும். விசேட சேவைக்காக பொலிஸார் அழைக் கப்படுவர் எனத் தீர்மானிக்கப்பட்டது. (111)

## போக்குவரத்து வசதி

இன்று மாலை 6.00 மணிக்கு யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெறும் - 'நெஞ்சோடு பேசும் இசை நிலா' நிகழ்வில் கலந்து கொள்ளும் பார்வையாளர்களின் நன்மை கருதி, நிகழ்வு நிறைவெய் தியதும் சகல இடங்களுக்குமான பஸ் சேவை ஒழுங்குபடுத்தப்பட்டுள் ளதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித் துள்ளனர்.



கட்டைவேலி - நெல்லியடி கலாசாரப் பெருமன்றத்தால் அண்மையில் யாழ். மாவட்டத்தின் சிறந்த துணிச்சலான பத்திரிகையாளர் விருது, பத்திரிகையா ளர் வேலுப்பிள்ளை தவச்செல்வத்திற்கு வழங்கி கௌரவிக்கப்பட்டது. யாழ். மாவட்ட அதிபர்கள் சங்கத் தலைவரால் ஊடகவியலாளர் தவச்செல்வத் திற்கு விருது வழங்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம் இது.

# மாநகரசபை யாழ்ப்பாணம்
# கேள்வி அறிவித்தல் 2003

கீழ்க்குறிப்பிட்டுள்ள வீதி வேலைகளுக்கான கேள்விகள், "இக்ராட்" நிறுவனத்தில் தரம் - 9 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந் தக்காரரிடமிருந்து என்னால் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும் கடைசித்திகதி - 23.07.2003 பி.ப. 3.00 மணி.
கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி - 25.07.2003 நண்பகல் 12.00 மணி.
கேள்விகள் திறந்து பரிசீலிக்கும் திகதி - 25.07.2003 பி.ப. 2.00 மணி.

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் யாவும் அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையில் வைக்கப்பட்டு மாநகர ஆணையாளர், மாநகரசபை, யாழ்ப்பாணம் என முகவரியிடப்பட்டு, கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படவேண்டும். அல்லது இதற்கென இவ் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்பட வேண்டும் கேள்விப் பத்திரத்தை கொண்டுள்ள கடித உறையின் இடதுபக்க மூலையில் கேள்வியின் பெயர் குறிப்பிடவேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

| வேலையின் பெயர் | மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புக் கட்டணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணம் உட்பட |
|---|---|---|
| 1. கொழும்புத்துறை 1 ஆம் குறுக்குத்தெரு | 2000/- | 300/- |
| 2. கொழும்புத்துறை 2 ஆம் குறுக்குத்தெரு | 2000/- | 300/- |
| 3. கொழும்புத்துறை 4 ஆம் குறுக்குத்தெரு (மதகு உட்பட) | 2000/- | 300/- |
| 4. உப்புக்குளம் வீதி, கொழும்புத்துறை | 2000/- | 300/- |
| 5. கொழும்புத்துறை 5 ஆம் குறுக்குத்தெரு | 2000/- | 300/- |
| 6. சுவாமியார் வீதி, கிழக்கு ஒழுங்கை | 2000/- | 300/- |
| 7. சென் ஜேம்ஸ் மகா வித்தியாலய வீதி, குருநகர் | 2000/- | 300/- |
| 8. ஓடக்கரை வீதி (2 மதகு உட்பட) | 2000/- | |
| 9. புதுமை மாதா கோவில் வீதி, குருநகர் | 2000/- | 300/- |
| 10. றெக்கிளமேசன் 2 ஆம் குறுக்குத்தெரு | 2000/- | 300/- |
| 11. சென் ஜேம்ஸ் கிழக்கு வீதி, குருநகர் | 2000/- | 300/- |
| 12. நீர்த்தாங்கி 1 ஆம் குறுக்குத்தெரு, குருநகர் | 2000/- | 300/- |
| 13. நீர்த்தாங்கி 5 ஆம் குறுக்குத்தெரு, குருநகர் | 2000/- | 300/- |
| 14. அருளம்பலம் லேன் | 2000/- | 300/- |
| 15. பொன்னம்பலம் வீதி | 2000/- | 300/- |
| 16. நெடுங்குளம் வீதி (பகுதி) | 2000/- | 300/- |
| 17. சின்னாலங்கண்டு வீதி | 2000/- | 300/- |
| 18. குகன் வீதி | 2000/- | 300/- |
| 19. முள்ளி வீதி | 2000/- | 300/- |
| 20. ஆள்காட்டி லேன் | 2000/- | 300/- |
| 21. அம்பாள் வீதி, நாயன்மார்கட்டு | 2000/- | 300/- |
| 22. பெஸ்கி சனசமூக நிலைய ஒழுங்கை | 2000/- | 300/- |
| 23. தேவரிக்குளம் லேன் | 2000/- | 300/- |
| 24. சீனிவாசகம் வீதி | 2000/- | 300/- |
| 25. பாங்சால் வீதி (பகுதி) | 2000/- | 300/- |

மாநகரசபை,
யாழ்ப்பாணம்.
09.07.2003

(சீ-1228)

இ.இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

# சர்வதேச குற்றவியல் நீதிமன்றம்!

சர்வதேச குற்றவியல் நீதிமன்றின் தோற்றம், உலகளாவிய ரீதியில் பெண்களுக்கு ஓர் வரப்பிரசாதம் என்றே கூறலாம். மனித இனம் எதிர் கொள்ளும் குற்றச்செயல்கள், போரினால் ஏற்படுத்தப்படும் குற்றச்செயல் கள், இன அழிப்பு போன்ற வன்முறைகளை விசாரித்து நீதி வழங்குவ தற்காக ஏற்படுத்தப்பட்ட இந்தச் சர்வதேச குற்றவியல் நீதிமன்று - உலகின் முதலாவது நிரந்தரமான சர்வதேச குறைகேள் நீதிமன்றாக அமைந்துள்ளது.

இந்த நீதிமன்றின் தோற்றப்பாடு எல்லோருக்கும் மிக முக்கியமானதாக இருந்தபோதிலும் - பெண்களைப் பொறுத்தவரை, நெடுங்காலமாக புறந் தள்ளி ஒதுக்கப்பட்ட பெண்களுக்கு எதிரான குற்றச்செயல்கள் தொடர் பான வழக்குகள் இந்த நீதிமன்றில் முன்னெடுக்கப்படும் வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நீதிமன்று ஓர் நீதிசார் நிறுவனமாக ஐ.நா.அமைப்புள் தன் னிச்சையாகவும், சுதந்திரமாகவும் செயற்படும் ஓர் அமைப்பாக உரு வாக்கப்பட்டுள்ளது. இந்த அமைப்பின் உருவாக்கம் - ஆண் பெண் இரு பாலாரதும் சமமான பிரதிநிதித்துவத்தை, சகல மட்டங்களிலும் உறுதிசெய்வதாக அமைந்துள்ளது.

வன்முறைகளினால் பாதிக்கப்படும் பெண்களுக்கு, சட்டரீதியான உதவியை வழங்கும் செயற்பாட்டையும் நிறுவனம் கொண்டுள்ளது. இந்த நீதிமன்றை செயற்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட, ரோம் நிலையியற் கட்டளையை அடிப்படையாகக்கொண்ட ஒப்பந்தம் உரு வாகுவதற்கு 60 விதப்புரைகள் தேவைப்பட்டன.

2002 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் - இந்த ஒப்பந்தம் செயல்வடிவம் பெற்று சர்வதேச குற்றவியல் மன்று உருவாக்கப்பட்டது. இவ்வாறு ஏற்படுத்தப்பட்ட ரோம் நிலையியற் கட்டளையில் மிகப் பிரதான அம்ச மாக - நீதிபதிகள் தெரிவு, உத்தியோகத்தர் தெரிவு போன்ற சகல நியமனங்களிலும் ஆண் பெண் சமத்துவம் பேணப்படுவதை உறுதி செய்கின்றமை, மிகச் சிறப்பான ஓர் அம்சமாகும்.

சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் பங்குபற்றி செயற்பட விரும்பும் பெண்களுக்கு - அவர்களது வாக்குரிமை, ஏற்பாடுகள் தொடர்பாக சிறந்த தகவல்கள் வழங்கப்படுகின்றன. 2002 ஆம் ஆண்டு செப்ரெம்பர் - நவம்பர் வரையிலான காலப் பகுதியில், 45 தேர்வாளர்களில் 10 பேர் பெண் நீதிபதிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

2003 ஆம் ஆண்டு பெப்ரவரியில் தெரிவுசெய்யப்பட்ட 18 நீதிபதிகளில், 7 பேர் பெண்களாவர். இந்த நியமனங்கள், பெண்கள் உயர் பதவிகளில் இடம்பெறக்கூடிய வகையில் ஏற்படுத்தப்பட்ட வரலாற்று நிகழ்வாகும்.

சர்வதேச குற்றவியல் நீதிமன்று, பெண்கள் சமத்துவத்தோடுகூடிய அரசியல் நோக்கங்களைத் தொடர்ந்து வெளிப்படுத்துவதுடன், பல்வேறு வழிகளில் அவற்றை அடைய முனைவதாக செயற்படவுள்ளது. பால் நிலை, நீதி தொடர்பாக பெண்கள் முன்னெடுப்பு ஒன்றின் உருவாக்கம் இதன்மூலம் ஏற்படுத்தப்படலாம்.

இந்த நீதிமன்று - நெதர்லாந்தில் கேக் நகரில் அமைந்துள்ளது. இந்த நீதிமன்றின் தோற்றம், பெண்கள் தமது பல பிரச்சினைகளுக்கு நீதி காண்பதற்கு வாய்ப்பளிக்கும் நிறுவன ரீதியாக வழிகாட்டலை ஏற்படுததியுள்ளது. இதன் சேவையைப் பயன்படுத்துவதில் பெண்கள் முனைப்புக் காட்டவேண்டும்.

– சறோஜா சிவச்சந்திரன்

# யாழ்ப்பாணத்தில் ஊடகசபை இயக்க ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டது

யாழ்ப்பாணத்தில் ஊடகசபை ஒன்றினை அமைப்பது தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று, நேற்றுமுன்தினம் மாலை நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற் றது.

இந்தக் கலந்துரையாடலில் - ஊடகசபைக்கான ஆலோசகர் சபை குறித்து ஆராயப்பட்டதுடன், இந்த ஆலோசகர் சபையில்- ஸ்கிறிப் நெற் நிறுவனத்தின் லண்டன் விரிவுரை யாளர்கள் நான்கு பேரும், சிங்களத் திரைப்பட இயக்குநர்கள் மூவரும் மற்றும் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் மோகனதாஸ், பேரா சிரியர் சண்முகதாஸ், பேராசிரியர் சிவச்சந்திரன் ஆகியோரும் இடம் பெற்றுள்ளனர்.

## ஸ்ரீனிவாசன் பதவியேற்பு

சாவகச்சேரி பிரதேச செயலாள ராகப் பணியாற்றிய க.கேதீஸ்வரன் கோப்பாய் பிரதேச செயலகத்திற் கும், கோப்பாய் பிரதேச செயலாள ராக கடமையாற்றிய செ.ஸ்ரீனிவாசன் சாவகச்சேரி பிரதேச செயலகத்திற் கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ள னர். செ.ஸ்ரீனிவாசன் சாவகச்சேரி பிரதேச செயலாளர் பதவியை ஏற் றுக்கொண்டுள்ளார்.

## சாவகச்சேரி நவீன சந்தையில் மலசலகூடங்கள்

சாவகச்சேரி நகரசபை, நவீன சந்தைக்கென 9 இலட்சம் ரூபா செலவில் தொடர் மலசலகூடங்களை அமைத்துள்ளது. முன்னர் நவீன சந்தையில் இருந்த மலசல கூடங் கள் அனைத்தும், 2000 ஆண்டு சாவகச்சேரியில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கையினால் அழிவடைந்து போனமை குறிப்பிடத்தக்கது. மேற் படி தொடர் மலசலகூடங்களை அமைப்பதற்கான வேலைகள் முழு வதும் முடிவடைந்த நிலையில் காணப்படுகின்றன. (29)

ராஜா யாழ்ப்பாணம்.
இன்று மட்டும்
விக்கிரம், ஜோதிகா, விவேக்
தூள்
தினசரி 10.30, 2.30, 6.30.9.30
12 முதல் - மாதவன், ஜோதிகா
பிரியமானதோழி
(சீ-1137)

நிறஞ்சனாஸ் சங்கானை
விஜய், மீரா ஜஸ்மின் நடித்த
புதிய கீதை
காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
தினசரி இரவு. 8.45 (பு.நே)
THE LORD OF THE RINGS
(சீ-1138)

## நாடும் நடப்பும்




# இடைக்கால நிர்வாகத்துக்குப் பதிலாக மாகாண நிர்வாகக் குழு யோசனை!

## விரைவில் அரசு சமர்ப்பிக்கும்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு - அரசாங்கம் அனுப்பத் தீர்மானித்துள்ள இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை, 'மாகாண நிர்வாகக் குழு' என்ற பெயரில் அமைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகம் என்ற பெயரில் கட்டமைப்பு உருவாக்கப்படுவதில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகவே, மாகாண நிர்வாகக் குழு என்ற அமைப்பை ஏற்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதாக, அரசாங்க வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

இந்தக் கட்டமைப்பில் மாவட்ட அரச அதிபர்களுக்கு அதிக முக்கியத்துவம் இருக்கின்றபோதும், அரசு மற்றும் புலிகள் தரப்புகளுக்குச் சமமான அதிகார வாய்ப்புக்கள் வழங்கப்படும் என்றும் கூறப்படுகின்றது.

இந்த நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பல்வேறு தரப்புக்களுடனும் தொடர்ச்சியான பேச்சுக்களை நடத்திவருவதாகவும்,

கடந்த செவ்வாய்க்கிழமை அலரி மாளிகையில், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் - அமைச்சர்கள் ஜி.எல்.பீரிஸ், மிலிந்த மொறகொட உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டதாகவும் தெரியவருகின்றது.

# எதிர்க்கட்சி மாகாணசபை உறுப்பினர்களின் பாதுகாப்பை அதிகரிக்குமாறு வலியுறுத்து!

## ஜனாதிபதி, பிரதமரிடம் நேரில் முறையிட முடிவு

(கொழும்பு)

எதிர்க்கட்சி மாகாணசபை உறுப்பினர்கள் தமது பாதுகாப்பை அதிகரிக்குமாறு - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடமும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடமும் நேரில் கோரிக்கை விடுக்கவுள்ளனர்.

எதிர்க்கட்சி மாகாணசபை உறுப்பினர்கள், நேற்று முன்தினம் நாடாளுமன்றக் கட்டடத்தில் கூட்டம் ஒன்றை நடத்தினர். எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில், எதிர்க்கட்சி மாகாணசபை உறுப்பினர்களின் பாதுகாப்புக் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

அரசாங்கத்திடம் தமக்குப் பாதுகாப்பு வழங்குமாறு கோரியபோதும் - அது நிராகரிக்கப்பட்டுவிட்டதாகவும், தமக்கு இரண்டு பொலிஸாரின் பாதுகாப்பு வழங்கப்படவேண்டும் என்றும், ஒரு கைத்துப்பாக்கி வழங்கவேண்டும் என்றும், எதிர்க்கட்சி மாகாணசபை உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.

இரண்டு எதிர்க்கட்சி மாகாணசபை உறுப்பினர்கள் கொலை செய்யப்பட்டுவிட்டபோதும், அரசாங்கம் தமது பாதுகாப்பில் அக்கறையின்றி இருப்பதாகவும், குறிப்பிட்ட எதிர்க்கட்சி மாகாணசபை உறுப்பினர்கள், இந்தக் கொலைகள் குறித்து விரிவான விசாரணைகள் நடத்தப்பட வேணடும் என்றும் கோரிக்கை விடுத்தனர்.



அத்துடன், தமது பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடமும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடமும் நேரடியாகக் கோரிக்கை விடுக்கவும் இந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய எதிர்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ, மாகாணசபை உறுப்பினர்களின் பாதுகாப்புக் குறித்து, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் கலந்துரையாடி, நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

# இடைக்கால நிர்வாக யோசனையை அமைச்சரவையில் விளக்கவேண்டும்!

## ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு

வடக்கு - கிழக்கில் அமைக்கப்படவுள்ள இடைக்கால நிர்வாக யோசனைகள் பற்றி அமைச்சரவைக் கூட்டத்தில் விளக்குமாறு - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, அரசாங்கத்திடம் கேட்டுள்ளார்.

அமைச்சரவைக் கூட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றபோதே, ஜனாதிபதி சந்திரிகா இவ்வாறு கேட்டுக்கொண்டார். அத்துடன், அரசு முன்வைத்துள்ள இடைக்கால நிர்வாக யோசனைகள் எந்தநிலையில் இருப்பதாகவும், ஜனாதிபதி சந்திரிகா கேள்வி எழுப்பினார்.

ஜனாதிபதி சந்திரிகாவின் கேள்விக்குப் பதிலளித்த நீதி, அரசியல் விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் -

இடைக்கால நிர்வாகம் தொடர்பான கருத்துப்பரிமாற்றங்கள் நடைபெறுகின்றன. இது தொடர்பாக அரசாங்கம், புலிகளுக்கு யோசனைகளைத் தெரிவிக்கவுள்ளது. ஆனால், புலிகள் தரப்பிடமிருந்து இடைக்கால நிர்வாகம் தொடர்பான எந்த யோசனையும் கிடைக்கவில்லை. நோர்வே ஊடாகவே அரசாங்கம் இது தொடர்பான கருத்துப்பரிமாற்றங்களை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தார்.

இதையடுத்தே - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, அரசாங்கத்தின் இடைக்கால நிர்வாக யோசனைகள் குறித்து அமைச்சரவைக் கூட்டத்தில் விளக்கமாக விபரிக்கப்படவேண்டும் எனக் குறிப்பிட்டார்.

# விளையாட்டு உபகரணக் கொள்வனவில் மோசடி; அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப் பணிப்பு!

பாடசாலைகளில் ஜிம்னாஸ்ரிக் விளையாட்டை அறிமுகப்படுத்தும் நோக்கில், கல்வி அமைச்சின் விளையாட்டுப் பிரிவினால், விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டதில் ஊழல்கள் இடம்பெற்றிருப்பதாகத் தெரியவந்துள்ளது.

விளையாட்டு உபகரணக் கொள்வனவில் முறைகேடுகள் இடம்பெற்றிருப்பதாகப் புகார்கள் தெரிவிக்கப்பட்டதையடுத்து, கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு, இது குறித்து விசாரணைக்கு உத்தரவிட்டிருந்தார்.

இந்த விசாரணைகளிலேயே ஊழல்கள் இடம்பெற்றிருப்பது உறுதி செய்யப்பட்டிருக்கின்றது. இரண்டு கோடி ரூபாவுக்கு வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இந்த விளையாட்டு உபகரணங்களில் பெரும்பாலானவை பாவனைக்கு உதவாதவை என்றும், தரம் குறைந்தவை என்றும் தெரியவந்தது.

பத்தாயிரம் ரூபா பெறுமதியான உபகரணங்கள், நாற்பத்து மூவாயிரம் ரூபாவுக்குக் கொள்வனவு செய்யப்பட்டிருப்பது தெரியவந்துள்ளது.

மேலும், பல உபகரணங்கள் எந்த அங்கீகாரமோ, கேள்விப்பத்திர நடைமுறைகளோயின்றிக் கொள்வனவு செய்யப்பட்டிருப்பதும் தெரியவந்தது.

இதையடுத்து கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு, குறிப்பிட்ட அதிகாரிகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவு பிறப்பித்துள்ளரார்.

### சதுரங்க பயிற்சி முகாம்

யாழ்ப்பாணம் சதுரங்க சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சதுரங்கப் பயிற்சி முகாம், எதிர்வரும் 15 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு யாழ்.இந்துகல்லூரியில் நடைபெறவுள்ளது.

மேற்படி பயிற்சி முகாமினை நடத்தவென காப்போல் கழகத்திலிருந்து பயிற்சியாளர்களும் வருகைதர இருப்பதால் - யாழ் சதுரங்க சங்க உறுப்பினர்கள் மற்றும் ஆர்வலர்கள் அனைவரையும் பங்குபற்றிப் பயன்பெறுமாறு - சங்கச் செயலாளர் அறிவித்துள்ளனர்.

# பெற்றோலிய வள ஆய்வு நடத்த நாடாளுமன்றம் சட்ட அங்கீகாரம்!

(கொழும்பு)

இலங்கையைச் சுற்றியுள்ள கடற்பிரதேசத்தில் பெற்றோலிய மற்றும் இயற்கை வாயு தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்வதற்கு, வழிசெய்யும் சட்டமூலத்துக்கு, நேற்று முன்தினம் நாடாளுமன்ற அங்கீகாரம் கிடைத்தது.

மின்சக்தி எரிபொருள்துறை அமைச்சர் கரு ஜெய சூரியவினால் சமர்ப்பிக்கப்பட்ட இந்தப் பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது, 83 வாக்குகள் ஆதரவாகவும், 15 வாக்குகள் எதிராகவும் கிடைத்தன.

பொதுஜன ஐக்கிய முன்னணி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்கெடுப்பின்போது சபையில் இருக்கவில்லை. ஆனால், பொதுஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்கள் விவாதத்தின் போது, இந்தச் சட்டமூலத்துக்கு ஆதரவாக உரையாற்றியிருந்தனர்.

ஜே.வி.பி. - நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தப் பிரேரணைக்கு எதிராக வாக்களித்திருந்தனர். ஜே.வி.பி-நாடாளுமன்ற உறுப்பினர்களை எதிர்த்து வாக்களித்தமை குறித்துக் கருத்து வெளியிட்ட மின்சக்தி எரிபொருள்துறை அமைச்சர் கரு ஜெயசூரிய -

பெற்றோலிய வள ஆய்வுகளை மேற்கொள்வதன் மூலம், அடையப்போகின்ற நன்மை நாட்டு மக்களையே சென்றடையப் போகிறதே தவிர, அரசியற்கட்சிகளுக்கு அல்ல என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும், என்றார்.

இந்த ஆய்வு குறித்து கருத்து வெளியிட்ட பொதுஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் றொனி டீ மெல், பெற்றோலிய வளதைக் கண்டுபிடிப்பதற்கு, முன்னர் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தோல்வி கண்டன. எனவே, அரசாங்கம் சரியான திட்டத்துடன் கவனமாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று குறிப்பிட்டார்.

பெற்றோலியவள ஆய்வுகளை மேற்கொள்வதற்குச் சட்ட அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள நிலையில், அம்பாந்தோட்டை, மன்னார் கடற்பரப்புகளில் ஆய்வுகளை மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரியவருகிறது.

# சோனியாகாந்தி தலைமையில் புதிய அரசியல் மாற்றங்கள்!

## கலைஞர் கருணாநிதி தெரிவிப்பு



இந்திரா காங்கிரஸ் கட்சியின் தலைமையில் புதிய அரசியல் மாற்றங்கள் ஏற்படலாம் என்று, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மு.கருணாநிதி தெரிவித்துள்ளார்.

அறிவாலயத்தில் செய்தியாளர்களிடம் பேசியபோதே, அவர் இவ்வாறு குறிப்பிட்டார். மதச்சார்பற்ற கூட்டணியை அமைப்பதற்காக, இடதுசாரிக் கட்சிகளுடன் இணைந்து செயற்படத் தயாராக இருப்பதாக, காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியாகாந்தி தெரிவித்திருப்பது குறித்துக் கருத்து வெளியிட்டபோதே, கலைஞர் மு.கருணாநிதி இவ்வாறு குறிப்பிட்டார்.

பாரதீய ஜனதாக் கட்சிக்கு எதிரான கருத்துக்கொண்ட கட்சிகள் இணைந்து, சோனியாகாந்தி தலைமையில் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்தலாம் என்று கருணாநிதி தெரிவித்தார்.

பாரதீய ஜனதாக் கட்சியின் துணைத்தலைவரும், துணைப்பிரதமருமான எல்.கே.அத்வானி, தமிழக முதல்வர் ஜெயலலிதாவுடன் கொண்டிருக்கும் நெருக்கமான தொடர்புகள் குறித்து, பாரதீய ஜனதாக் கூட்டணியிலுள்ள தமிழகக் கட்சிகள் விசனமடைந்துள்ளன. தி.மு.க., ம.தி.மு.க., பா.ம.க. என்பன அத்வானியின் இந்தப் போக்கினால் அதிருப்தியடைந்துள்ளன. அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் பாரதீய ஜனதாக் கூட்டணிக்கு வாஜ்பாய் தலைமை தாங்கமாட்டார் என்றும், அத்வானியே தலைமை வகிப்பார் என்றும் தெரிவிக்கப்படும் நிலையில், இந்தக் கட்சிகள் சோனியாகாந்தியுடன் கூட்டணியை ஏற்படுத்திக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# அடுத்த வரவு செலவுத்திட்டத்தில் அரச ஊழியருக்கு சம்பள உயர்வு

## நிதியமைச்சரிடம் பிரதமர் பணிப்பு



அடுத்த வரவு செலவுத்திட்டத்தில் அரசாங்க ஊழியர்களின் சம்பளங்களை உயர்த்துவதற்குத் தேவையான நிதியை ஒதுக்கீடு செய்யுமாறு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

அமைச்சரவைக் கூட்டத்துக்கு முன்பாக, நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கூட்டத்திலேயே - பிரதமர் ரணில் வீக்கிரமசிங்க, நிதியமைச்சர் கே.என். சொக்ஸிக்கு இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாலும், வெளிநாட்டு உதவிகள் பெருமளவில் கிடைத்துள்ளதாலும், அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று, நீதி அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இந்தக் கூட்டத்தில் கேட்டுக்கொண்டிருந்தார்.

இதையடுத்தே, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அடுத்த வரவு செலவுத்திட்டத்தில் சம்பள உயர்வு வழங்க நடவடிக்கை எடுக்குமாறு, நிதியமைச்சர் கே.என்.சொக்ஸியிடம் பணித்துள்ளார்.

### கண்காட்சி

உள்ளூராட்சி வாரத்தின் தொடர் நிகழ்வாக - வலிகாமம் தெற்குப் பிரதேசசபை, மாபெரும் கண்காட்சியை 15 ஆம் திகதி இராமநாதன் கல்லூரியில் நடத்தவுள்ளது.

முன்பள்ளி நிலையங்களும், சனசமூக நிலையங்களின் சமாசமும் இணைந்து நடத்தவுள்ள இக்கண்காட்சியில், சமுதாயத்தை மேம்படுத்துவதற்கு ஆலோசனை வழங்கும் பல பொருட்கள் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

# மாவட்ட மட்டத் தமிழ்த்தினப் போட்டி இன்று முதல் 14 ஆம் திகதி வரை!

(உடுவில்)

யாழ்.மாவட்ட மட்டத் தமிழ்த் தினப் போட்டிகள் இன்றுமுதல் 14 ஆம் திகதி திங்கட்கிழமைவரை நடைபெறவுள்ளன.

இன்று - யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடப் பாடசாலையில் நாட்டுக்கூத்துப் போட்டியும், நாளை யாழ்.திருக்குடும்ப கன்னியர்மட பாடசாலையில் வாசிப்பு -பிரிவு 1,2,3 , கதை கூறல் பிரிவு 1 , பேச்சு - பிரிவு 1,2,3,4,5, பாவோதல் - 1,2,3,4,5, பேச்சு (முஸ்லிம் நிகழ்ச்சி), இசைத்திறன், வீணை பிரிவு 2,3,4,5, வயலின் - பிரிவு 2,3, 4,5, புல்லாங்குழல் - பிரிவு 2,3,4,5 ஆகிய போட்டிகளும் நடைபெறவுள்ளன.

நாளை மறுநாள் திருக்குடும்ப கன்னியர்மட பாடசாலையில் தனி நடனம் - பிரிவு 1,2,3,4,5, நடனம் குழு 1, நாட்டிய நாடகம், நாடகம் ஆகிய போட்டிகளும், அதேநேரம் யாழ்.மத்திய கல்லூரியில் - இசையும் அசைவும், தனி இசை - பிரிவு 2,3,4,5, குழு இசை 1, குழு இசை 2, வில்லுப்பாட்டு, விவாதம், தமிழ் அறிவு வினா விடை ஆகிய போட்டிகளும் நடைபெறும்.

14 ஆம் திகதி திங்கட்கிழமை வேம்படி மகளிர் கல்லூரியில் ஆக்கம், எழுத்து பிரிவு 1, கட்டுரை, கடிதம் - பிரிவு 2,3, கட்டுரை, சுருககம், கவிதை நயத்தல் - பிரிவு 4, தமிழியற் கட்டுரை, சொற்பொழிவு, இலக்கண வினா திறனாய்வு, குறு நாடக ஆக்கம் (திறந்த போட்டி) கவிதை ஆக்கம் - பிரிவு 4,5, சிறுகதை ஆக்கம் - பிரிவு 4,5 ஆகிய போட்டிகளும் இடம்பெறும்.

போட்டியாளர்கள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு அடையாள அட்டையைக் கொண்டு வரவேண்டுமெனவும், ஒப்பனை நிகழ்ச்சிகள் காலை 10 மணிக்குமுன் தயார்படுத்தப்படவேண்டும் எனவும் கேட்கப்பட்டுள்ளது. (101)

# உள்ளூராட்சி வாரத்தையொட்டி நெடுந்தீவில் விளையாட்டு விழா

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு, நெடுந்தீவு பிரதேச சனசமூக நிலையங்களின் சமாசத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விளையாட்டு விழா, எதிர்வரும் 14 ஆம் திகதி தொடக்கம் 21 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

45 வயதுக்கு மேற்பட்டோருக்கான - தாச்சிப்போட்டி, கரப்பந்து, கயிறுழுத்தல், வேகநடை, கைக்கொடிச்சவாரி, மெதுவான சைக்கிள் ஓட்டம், சிறுவர்களுக்கான பலூன் ஊதி உடைத்தல், தடையோட்டம் என்பனவும், வயதெல்லையின்றிய குதிரையோட்டம், சைக்கிளோட்டம் என்பவையும் நடைபெறவுள்ளன.

## இலங்கையின் முதலாவது

# தகவல் தொழில்நுட்பக் கிராமம்; கிழக்கு மாகாணத்தில் அமையும்!

இலங்கையில் முதலாவது தகவல் தொழில்நுட்பக் கிராமத்தை, கிழக்கு மாகாணத்தில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

மலேசியாவின் உதவியுடன் இந்தத் தகவல் தொழில்நுட்பக் கிராமம் அமைக்கப்படவுள்ளது. இதற்கான ஒப்பந்தத்தில், மலேசிய அரசாங்கத்துடன் அமைச்சர் ரவூப் ஹக்கீமின் அந்தரங்கச் செயலாளர் ஹசன் அலி கையெழுத்திட்டார்.

இந்த உடன்பாடு கைச்சாத்திடப்பட்டதையடுத்து, அடுத்த ஆறு மாதங்களுக்குள், கிழக்கில் தகவல் தொழில்நுட்பக் கிராமம் அமைக்கப்படவுள்ளது. இதன்மூலம் ஆசியாவிலுள்ள ஐம்பது கோடி மக்களுடன் நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ளமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## மானிப்பாய் இந்துக் கல்லூரி

# நிறுவுநர் நாளையொட்டிய நாடகப் போட்டி முடிவுகள்!

(மானிப்பாய்)

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் நிறுவுநர் தினவிழாவும், இல்லங்களுக்கிடையிலான நாடகப் போட்டிகளும் அண்மையில் நடைபெற்று முடிந்தன.

நாடகப் போட்டியிலே முதலிடத்தை மாணிக்கர் இல்லத்தின் "இருட்டுக்குள் சுருட்டி" என்ற நாடகமும், சம்பந்தர் இல்லத்தின் "சிறிய சிலம்புகள்" இரண்டாவது இடத்தையும், வாகீசர் இல்லத்தின் "நீ செய்த நாடகம்" மூன்றாவது இடத்தையும், சுந்தரர் இல்லத்தின் "கற்பனை கடந்த" என்ற நாடகம் நான்காவது இடத்தையும் பெற்றன.

இந்த நாடகங்களில் நடித்த நடிகர்களில் சிறந்த நடிகராக தி.கோபிராஜ் தெரிவுசெய்யப்பட்டு பரிசு வழங்கப்பட்டன. (101)

# இந்தியத் தலைவர்களிடம் டக்ளஸ் இலங்கையில் தலையிட வற்புறுத்து

## ஈ.பி.டி.பி. வெளியிட்ட அறிக்கையில் தெரிவிப்பு

அண்மையில் இந்தியாவுக்கு மேற்கொண்ட விஜயம் தொடர்பாக, ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ள கருத்துக்கள் குறித்து ஊடகச் செய்தியொன்றை அக்கட்சி வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

இந்தியாவில் அரசியல் தலைவர்களையும், உயர்மட்ட அரசாங்க அதிகாரிகள், புத்திஜீவிகள் உட்படப் பலரையும் சந்தித்துப் பேசியுள்ள டக்ளஸ் தேவானந்தா - தமது விஜயம் மிகவும் பயன்மிக்கதாக அமைந்தது எனத் தெரிவித்துள்ளார். இந்தியத் தலைவர்கள், அரசாங்க உயர் அதிகாரிகள் மற்றும் புத்திஜீவிகளுடன் நடத்திய பேச்சுக்களின்போது, டக்ளஸ் தேவானந்தா முன்வைத்துள்ள கருத்துக்கள் வருமாறு -

பல்வேறு விடயங்கள் பற்றியும் புலிகளுக்கு உணர்த்தக்கூடிய பலமும், தார்மீகக் கடமையும் இந்தியாவுக்கு உண்டு. இதனால் இந்தியா-இலங்கையின் பிரச்சினைகளில் கூடிய அக்கறை செலுத்தவேண்டியது அவசியமாகிறது என்றும் -

புலிகள் - அடிப்படை அரசியல் பிரச்சினைகள் தொடர்பாகப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்காமல், மேன்மேலும் தாமதப்படுத்துவது மோசமான விளைவுகளுக்கு இட்டுச் செல்வதாக அமையும். அடிப்படை அரசியல் பிரச்சினைகள் குறித்துப் பேச்சுக்களைத் தாமதமில்லாமல் ஆரம்பிக்கத் தேவையான அழுத்தங்களை, இந்திய அரசு கொடுக்க வேண்டும். அத்துடன், இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கான அரசியல் பேச்சுக்களில், சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்புக்களும் பங்கு கொள்வதை இந்தியா உறுதிப்படுத்த வேண்டும் என்றும் -

வடக்கு - கிழக்கு மாகாணத்திலும், ஏனைய இடங்களிலும் புலிகள் மேற்கொண்டுவரும் அராஜகச் செயற்பாடுகள் மற்றும் அரசியல் படுகொலைகளைத் தடுத்துநிறுத்துவதற்கு, நோர்வே அரசாங்கம் - புலிகளை நிர்ப்பந்திக்க வேண்டும். இதனை இந்திய அரசு அனுசரணையாளர்களான நோர்வேக்குத் திட்டவட்டமாக எடுத்துரைக்க வேண்டும் என்றும் -

இடைக்கால நிர்வாகம் என்ற போர்வையில், வடக்கு - கிழக்கு மாகாணம் புலிகளிடம் ஒட்டுமொத்தமாகக் கையளிக்கப்படுமாயின், அது அங்கு வாழும் மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளைப் பாதிப்பதாக அமையும். அத்துடன், அப்பகுதியில் ஒரு தனிக்கட்சியின் பாசிஸ ஆட்சி மேலோங்க வழிவகுக்கும். அவ்வாறானதொரு விடயம் நடந்தேறுமாயின் - அது தென்னிந்தியாவின் ஸ்திரத்தன்மையைப் பாதிக்கும் விடயமாகலாம் என்பதையும் - சட்ட விரோதமான கடற்போக்குவரத்துக்களில், புலிகளின் கப்பல்கள் ஈடுபட்டிருப்பது, புலிகள் யுத்தத்தை நோக்கியே நகர்கின்றனர் என்பதற்கு ஒரு அறிகுறியாகும். எனவே, மீண்டும் ஒரு யுத்தம் இலங்கையில் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக ஆக்கபூர்வமான வழிகளில் இந்திய அரசு இலங்கைக்கு உதவி வழங்கவேண்டும் எனவும் -

தமிழ்பேசும் மக்கள் மத்தியில்- ஜனநாயகம், அடிப்படை மனித உரிமைகள், பன்மைத்துவம் என்பன பேணப்படுவதற்கு - இந்திய அரசு தேவையான அனைத்தையும் மேற்கொள்ளவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையின் மிகநெருங்கிய அயல்நாடு இந்தியாதான். இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையிலான உறவுகள், தொடர்புகள், நீண்ட நெடிய வரலாற்றுப் பின்னணியைக் கொண்டது. வரலாறு, கலாசாரம், பண்பாடு, பொருளாதாரம் எனப் பல் துறைகளிலும் நெருங்கிய நட்புறவு இருநாடுகளுக்குமிடையில் உண்டு. இவை அனைத்துக்கும் எழுபதுகளின் பிற்பகுதி முதல், இலங்கை வாழ் தமிழ்பேசும் மக்களின் தேசிய அபிலாஷைகளைப் புரிந்துகொண்டு, இந்திய அரசுகள் தார்மீக, பொருளாதார, அரசியல் ஆதரவு வழங்கிவந்தமையும் மறுக்கப்பட முடியாதது எனவும் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்ததாக, அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# ஐ.நா. வாழ்க்கைத்தர பட்டியலில் இலங்கைக்கு 99 ஆவது இடம்!

ஐ.நா. அபிவிருத்தித்திட்டத்தின் கீழ் - உலகில் மிகவும் பின்தங்கிய வாழ்க்கைத்தரத்தைக் கொண்ட நாடுகளின் பட்டியல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் மனித அபிவிருத்திப் பிரிவின் அறிக்கையின் பிரகாரமே, இந்தத் தரப்படுத்தல் பட்டியல் வெளியிடப்பட்டிருக்கிறது. ஐ.நாவில் அங்கம்வகிக்கின்ற அனைத்து நாடுகளும் இப்பட்டியலில் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

ஆயுட்காலம், கல்வி வசதிகள், கல்வியறிவு வீதம், தலாவீத வருமானம் ஆகியவற்றின் அடிப்படையிலேயே - உலகின் தரமான, தரங் குறைந்த வாழ்க்கைத்தரம் கொண்ட பட்டியல்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன.

இதன்படி, உலகின் தரமான வாழ்க்கைத்தரம் கொண்ட நாடுகளின் பட்டியலில் முதலிடத்தில் நோர்வேயும், அதனைத் தொடர்ந்து சுவீடன், ஐஸ்லாந்து, அவுஸ்திரேலியா, நெதர்லாந்து, பெல்ஜியம், அமெரிக்கா, கனடா, ஜப்பான், சுவிஸ்சர்லாந்து, டென்மார்க், அயர்லாந்து, பிரிட்டன், பின்லாந்து, லக்சம்பேர்க், ஒஸ்ரியா, பிரான்ஸ், ஜேர்மனி, நியூசிலாந்து, ஸ்பெயின் ஆகிய இருபது நாடுகள் இடம்பிடித்துள்ளன.

இதேவேளை, இப்பட்டியலின் இறுதியில் றுவாண்டா, தன்ஸானியா, மலாவி, அங்கோலா, எதியோப்பியா, புருண்டி, மாலி போன்ற நாடுகள் இடம்பெற்றுள்ளன.

இந்தத் தரப்பட்டியலில் இலங்கை 99 ஆவது இடத்தையும், சீனா 104 ஆவது இடத்தையும், இந்தியா 127 ஆவது இடத்தையும், பங்களாதேஷ் 139 ஆவது இடத்தையும், நேபாளம் 144 ஆவது இடத்தையும் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

# ஆவரங்காலில் மணிமண்டப திறப்பு விழா

ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டபத் திறப்பு விழா - நாளை சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த மண்டபத்தைச் சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி திறந்து வைப்பார்.

ஆசியுரைகளை - ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், சிவஸ்ரீ வே.நடராஜா குருக்கள், அருட்கவி சி.விநாசித்தம்பி ஆகியோரும்- வாழ்த்துரையை யாழ்.பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் அ.மோகனதாஸ், அரசஅதிபர் செ. பத்மநாதன், பேராசிரியர் அ.சண்முகதாஸ், பிரதேச செயலர் ஸ்ரீனிவாசன் ஆகியோரும் நிகழ்த்துவர்.

தொடர்ந்து இசைநிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.


வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

முதலாவது அகவையில்



பெயர் : உ.ஹரினி
முகவரி : கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

ஏழாவது அகவையில்



பெயர் : ஜெ.அனோஜன்
முகவரி : ஏழாலை மத்தி, ஏழாலை.

எட்டாவது அகவையில்



பெயர் : க.அட்சரபானு
முகவரி : 166, கோயில் வீதி, நல்லூர்.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------------------------

முகவரி :------------------------------------------------


பிறந்த ஆண்டு:------------------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

-------------------
பெற்றார் ஒப்ப..

# தைக்கப்பட்ட ஆடைகளின் இறக்குமதியால்

**நல்லூர் பிரதேச செயலர் பிரிவின்கீழ் இயங்கும் கைத்தெறி நெசவு உற்பத்தி நிலைய ஆசிரியைகளான திருமதி அழகம்மா, செல்வி இரத்தினம் ஆகியோருடனான சந்திப்பு இது.**



1997 ஆம் ஆண்டு இந்தக் கைத்தறிப் பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. 6 மாதகாலப் பயிற்சி என்ற அடிப்படையில், வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட 10 பெண் பிள்ளைகளைப பயிற்சி வகுப்பில் சேர்த்துக்கொள்வோம். பயிற்சிக் காலங்களில் ஊக்குவிப்புக் கொடுப்பனவாக மாதாந்தம் 60 ரூபா வழங்கப்படுகிறது. இதில் 20 ரூபா, குறிப்பிட்ட பிள்ளையின் வங்கிக் கணக்கில் வைப்பில் இடப்படும். இது, அவர்களின் சேமிப்பின் அத்திவாரமாகவும் அமையும்.

இவ்வாறு பயிற்சிபெற்று முடிந்ததும், அவர்கள் தொடர்ந்தும் தொழிலாளர்களாகத் தம்மை மாற்றிக்கொள்ளாமல் இடையில் நிறுத்திக் கொள்கிறார்கள். தாங்கள் பெற்ற பயிற்சியைத் தொடர்ந்தும் வளர்த்துக்கொள்ளாமல் விடுவதால், பயிற்சியின் முழுப்பயனையும் பெற்றுக்கொள்ள முடியாது போய்விடுகிறது.

பயிற்சிபெற்ற பிள்ளைகளுக்குத் தொழில்வாய்ப்புக்களை வழங்க, எமது கைத்தறி நிலையம் தயாராக இருக்கின்ற போதும், அதில் ஆர்வங்காட்டுகின்ற பெண் பிள்ளைகளின் வீதம் தான் குறைவாகவே இருக்கின்றது.

1970 ஆம் ஆண்டுக் காலத்தில் தான், இந்தக் கைத்தறி நெசவு உற்பத்தியின் தேவையும், அவசியமும் அதிகமாக இருந்தது. ஆனால், தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள திறந்த பொருளாதாரக் கொள்கையின் விளைவாக, தாராளமான வெளிநாட்டுப் புடவைகள் இறக்குமதி செய்யப்படுவதனால்,



திருமதி அழகம்மா




1949 ஆம் ஆண்டு நல்லூரில் இருக்கின்ற நெசவுப்பயிற்சிக் கல்லூரியில்தான், நாங்கள் பயிற்சிகளைப் பெற்று வந்தோம். தற்போது பயிற்சிக்கு வருகிற பிள்ளைகளுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன. ஆனால், நாங்கள் முன்னர் கைத்தறி நெசவுப்பயிற்சி நிலையத்தில் பயிற்சிக்காகச் சேர்ந்தபோது, ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் எதுவும் வழங்கப்படுவதில்லை. அந்தக் காலங்களில் கைத்தறி நெசவுப்பயிற்சிகளைப் பெற்று, சித்தியடைந்தவர்கள்தான் இப்போது நெசவு ஆசிரியர்களாக இருக்கின்றார்கள்.


இலங்கை போன்ற நாடுகளுக்குக் கைத்தறிப் புடவைகள் காலநிலைக்கேற்றவையாக அமைந்தாலும், அவற்றின் விலை அதிகரிப்பாலும், வெளிநாட்டுப் புடவைகளின் தாராளமான இறக்குமதியாலும், அவற்றின் விலைக்குறைவாலும் கைத்தறிப் புடவைகளின் விற்பனை குறைவடைந்துள்ளது.

# கைத்தறிப் புடவைகளின் உற்பத்தி வீழ்ச்சி

நம்நாட்டுக் கைத்தறி உற்பத்திகளை வாங்குவதில் மக்கள் பின்நிற்கிறார்கள். அத்தோடு கைத்தறி உற்பத்திக்கான நூலின் விலை மற்றும் உற்பத்திச் செலவு என்பன உயர்வாக இருப்பதால், உற்பத்தி செய்யப்பட்ட புடவைகளின் விலையும் உயரவாக இருப்பதும், எமது உற்பத்திகளின் விற்பனை வீழ்ச்சிக்கு ஒரு காரணமாகும்.

இதுதவிர, பெண்பிள்ளைகளும் இதில் பயிற்சி பெறும் வீதம் குறைந்தற்கும் காரணம் இருக்கின்றது. இந்தக் கைத்தறி நெசவு நிலையத்தில் பயிற்சிபெறவருகின்ற அல்லது வேலை செய்ய வருகின்ற நாளொன்றுக்கு 40 முதல் 60 ரூபாவே சம்பளப்படியாக வழங்கப்படும். இந்த நிலையில் அந்தப் பிள்ளை வேறொரு நிறுவனத்துக்கு வேலைக்குச் சென்றால், மாதம் 2000 ரூபாவரை சம்பளமாகப் பெற்றுக்கொள்ளும். இதனால், பெண்பிள்ளைகள் இதைப் பயில்வதிலும் பின்நிற்கிறார்கள். அத்துடன், தற்போது ஏற்பட்டிருக்கின்ற வெளிநாட்டு வசதிவாய்ப்புக்கள் அதிகரித்திருக்கின்றமையாலும், பெண் பிள்ளைகள் இப்படியான சிரமமான வேலைகளைச் செய்யவும் முன்வருவதில்லை.

**சந்திப்பு - கலானந்தி**




செல்வி இரத்தினம்

எனினும், எமது கைத்தறி நெசவு உற்பத்தி நிலையத்தில் தயாரிக்கப்படுகின்ற புடவைகள், தலையணையுறைகள், கதிரைவிரிப்பு, படுக்கைவிரிப்பு என்பன நல்லூர் கோவில் உற்சவகாலங்களில் விற்பனைக்காக விடப்படும்போது, குறிப்பிட்ட அளவில் விற்கப்படுகின்றன. ❖



# வீட்டின் அழகைக்கொண்டு உங்களையே மதிப்பிடலாம்!



**தா**யைக் கொண்டு பிள்ளையை அழைக்கலாம் என்பார்கள். அதுபோல் வீட்டின் இலட்சணங்களைக் கொண்டு வீட்டாரை மதிப்பிடலாம் என்றும் கூறுவதுண்டு. குறிப்பாக, வீட்டின் இலட்சணம் என்று குறிப்பிடுவது, ஒரு வீடு எந்தளவுக்குச் சுத்தமாகவும், அழகாகவும் இருக்கிறதோ அதையே வீட்டின் இலட்சணம் என்பார்கள்.

வீட்டின் வரவேற்பு அறையானது, விருந்தினர்கள் வந்தால் அமர்கின்ற பகுதியாக அமைவதுண்டு.

எனவே, இந்த வரவேற்பறையின் ஜன்னல், திரைச்சேலைகள் சுத்தமாக இருக்கவேண்டும்.

அடிக்கடி தரையைச் சுத்தப்படுத்தி வைக்கவும். கதிரைகள் பாவிப்பதாயின், குஷன் துணிகளை நன்கு பராமரியுங்கள்.

முக்காலியில் அலங்காரப் பூக்கள் வைக்கும்போது, இயன்ற வரையில் பிளாஸ்ரிக்கிலான பூ வகைகளை வையுங்கள்.

சுவர் ஓரங்களில் படிந்துள்ள தூசிகளைத் தட்டுங்கள். சுவருக்கு வர்ணம் அடிக்கும்போது, ஏற்றவகையான நிறங்களைத் தெரிவுசெய்யுங்கள்.


சிலர் வீட்டுச் சுவர்களில் அளவுக்கு அதிகமான கலண்டர்களையும், வண்ணப்படங்களையும் தொங்கவிடுவதுண்டு. இவை அளவோடு ஒன்று, இரண்டு இருப்பதே நல்லது.

வரவேற்பறையை எவ்வாறு சுத்தமாக வைத்திருக்கிறீர்களோ, அதேபோன்று உள்ளறைகைளயும் சுத்தமாக வைத திருங்கள்.

பழைய உடுப்புகள், துணிகளை ஆங்காங்கே போடாமல், ஒரு பெட்டியில் போட்டு மூடிவைப்பது சுகாதாரத்தையும் தரும்.

# தாய் மனம்

உறக்கம் கலைந்த இரவுகளை
உனக்காகத் தொலைத்தவள் - தாய்
உன் கனவுகளுக்குக்கூட
வர்ணம் பூசிப் பார்த்து,
உன் நினைவுகளை எல்லாம்
வரிசையாகக் கோர்த்தவள்
தாய்...!
மின்னலடிக்கும் பொழுதினில்
நிலவின் மடியினில் உன்னை
ஈரவிழிகளுடன் எதிர்பார்த்துக்
காத்திருப்பவள் தாய்...!
உறக்கமில்லாமல் - உன்னை
நினைத்து உருகித் தவிப்பவள் - தாய்.
இமயமலைச் சிகரத்தைவிட
உயர்ந்தவள் தாய்.
எல்லோருக்கும் முதல் முகவரி தாய்.
என் நினைவுகள் எல்லாம்
உன் நினைவே.
தூரத்திலிருந்து ஒளிகொடுக்கும்
நிலவாய் - நீ
தூரத்தில் இருந்தாலும்
என்னை உரசும் தென்றலாய்
உன் நினைவுகள்... என்றும்
உறங்காமல் இருக்கும்.
அன்றும்...
இன்றும்...
என்றும்...
அன்பாலும்...
பாசத்தாலும்....
சுமப்பவள்...
தாய் என்னும் தெய்வம்.



*சு. சுகதினி, இணுவில்.*

# கவிதைச் சோலை

## மலரும் நன்றே வாழ்க்கையடி



அன்பு நிறைந்த சிநேகிதியே
எதிலும் கவனம் தேவையடி
நெஞ்சம் நிறையும் அன்பு
நேசம் கொள்ளச் செய்யுமடி!

சின்னச் சின்னத் தவறும்
பெரிதாய் தோற்றம் கொள்ளுமடி
அன்பு மேவும் சிந்தனையால்
உலகை வெல்ல முடியுமடி!

காதல் என்று வந்தாலும்
கற்பைக் காத்தல் வேணுமடி
வேதம் இதுவென நீ நினைத்தால்
மலரும் நன்றே வாழ்க்கையடி!

*சி. வராகினி, அரியாலை.*

# பயன்தரும் சில குறிப்புகள்

❖ கண்களிலிருந்து நீர் வடிகின்றதா? செவ்வரத்தம் பூக்களைத் தயிர்விட்டு அரைத்து, தலையில் தடவி ஊறிய பின்பு குளித்து வந்தால் - கண் எரிச்சல், தீராத தலைவலி, கண்களில் நீர்வடிதல் நீங்கி, கண்கள் குளிர்வடையும்.

❖ வியர்வை காரணமாக முகப்பரு வருவது இயல்பே. அதைப் போக்குவதற்கு, கசகசாவை நன்கு ஊறவைத்து நன்றாக அரைத்து, முகத்தில் தடவி நன்கு காய்ந்த பின் கழுவவேண்டும். இப்படித் தொடர்ந்து ஒரு வாரம் செய்து வந்தால், முகப்பரு இருந்த இடமே தெரியாமல் போய் விடும்.

❖ தோல் வியாதிகள், உடல் துர்நாற்றம் உள்ளவர்கள் குளிர்கின்ற நீரில் எலுமிச்சம்பழச்சாறும், சிறிதளவு உப்பும் சேர்த்துக் குளித்துவந்தால் விரைவில் குணமாகும். வாசனையும் கமகமக்கும்.

❖ நித்திரை செய்ய முடியாமல் நுளம்பு கஷ்டம் தருகிறதா? படுக்கையறைப் பக்கத்தில் கொஞ்சம் வெங்காயச்சாற்றைப் பிழிந்துவிட்டுக் கொண்டால்போதும், ஒரு நுளம்பு கூடத் தலைகாட்டாது (வெங்காய வாசனை நான்கு நாட்களில் நமக்குப் பழகிவிடும்).

# ஒரு பூவின் பயணம்

## அத்தியாயம் 14

**நட்சத்திரம் நிறைந்த இரவில்
அதன் அமைதியை உடைத்து வெடித்த
ஒரு தனித்த துப்பாக்கிச்
சன்னத்தின் ஓசை.
எல்லாக் குழந்தைக் கதைகளிலும்
அர்த்தத்தை இல்லாதொழித்தது
எஞ்சிய சிறிய பகலிலோ
ஊமங் கொட்டைகளில்
தேர்செய்வதையும்
கிளித்தட்டு மறிப்பதையும்
அவர்கள் மறந்து போனார்கள்.**

யுத்தகால இரவொன்றின் நெருக்குதலாகத் தலைப்பிடப்பட்ட சிவரமணியின் கவிதைவரிகள் - எமது தேசத்தின் போர்க் காலப் பதிவுகளில் ஒன்றாகும். போரில் கருகிய தேசத்தில், குழந்தைகள் தங்கள் இயல்புகளையே இழந்து போகிறபோது - கல்வி எம்மாத்திரம்? தொடர்ச்சியான போர்கள், இடம்பெயர்வுகள், சொத்திழப்புகள், சொந்தங்களைப் பிரிதல் போனற தேச நிலைப்பாடுகள் - ஆண்,பெண், பிள்ளைகளின் அடிப்படைத் தேவைகள் நிறைவுசெய்யப்படுதலைத் தடுக்கின்றன. கல்விக்கான தயார்நிலையைப் பிள்ளைகள் பெற்றுக்கொள்வதற்கு அவர்களுடைய அடிப்படைத் தேவைகள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவேண்டும். எனவே, கல்வியுலக நெருக்கடிகளில் யுத்தம் மிகமுக்கியமானதாகக் கருதப்படுகிறது. இது பெண்ணிலைப் பட்டதாகவன்றி, முழுத் தேச மக்களுக்கும் உரிய பொதுவான நெருக்கடியாகவே காணப்படுகின்றது.



ச.சாரங்கா

அதேபோல, பொருளாதார நோக்கில் வறுமை- பிள்ளைகளின் தொடர்ச்சியான கல்விக்கு முற்றுப்புள்ளியிடவல்லது. பெரும்பாலான வறிய குடும்பங்களில் பெண்பிள்ளைகள்- சிறுவயதிலேயே தமது கல்வியை இடைநிறுத்துவதை அவதானிக்கலாம். குடும்பச்சுமையைத் தமது தோள்களில் தாங்குவதற்காகப் படிப்பை இடைநிறுத்தும் ஆண் பிள்ளைகளும் உண்டு. எனவே - இவ்வாறான பொதுவான நெருக்கடிகளைத் தவிர்த்து, கல்வியுலகில் பெண் சம்பந்தப்பட்ட நெருக்கடிகளை எடுத்து நோக்குவோம்.

எமது சமூகத்தின் மரபு வழிப்பட்ட சட்டதிட்டங்களுள் இருந்தபடியே, பெண் தனது கல்வியைத் தொடரவேண்டியிருக்கிறது. குறிப்பாக, பூப்பின் தருணந்தொட்டு பெண் ஒட்டுமொத்த சமூகத்தினாலும் கண்காணிக்கப்படுகிறாள். பெரும்பாலும் அவள் தனித்து இயங்குவதில்லை. தனித்த பிரயாணங்களை மேற்கொள்வதில்லை. சுயாதீனவழிப்பட்ட இயங்கல்கள் அவளிடமிருந்து மெல்லமெல்லப் பறித்தெடுக்கப்படுகிறன. ஒரு அன்பான தந்தையோ, பாசம் மிகுந்த சகோதரர்களோ அவளைப் பூவாகப் பேணிப்பாதுகாக்கத் தயாராக உள்ளார்கள். அந்த அன்புக் கரங்களுள் சந்தோஷமான, அமைதியான வாழ்வைப் பழக்கப்படுத்தி, 'நல்ல பெண்'களாக வாழ்ந்துகொள்பவர்கள் நம்மில் பலர். இந்தச் சூழ்நிலையில் பெண் தனித்தியங்காதவளாகவுள்ளநிலை எடுத்து நோக்கப்படத் தக்கது.

ஒரு பெண் தனது கற்றல் தேவைகளுக்காக நீண்டநேரம் தாமதித்து வீட்டுக்கு வரமுடியாது. அவள் தனது கூட்டாளிப் பெண்களுடன் சேர்ந்து படிப்பதற்காக இரவுப்பொழுதைத் தேர்ந்தெடுக்கமுடியாது. கல்விக்கூடங்களின் முன்பாகக் கூட்டமாக நின்று, தான் கொண்டிருக்கும் பாடரீதியான சந்தேகங்களை நிவர்த்திப்பதில்கூட, பெண் சில சிக்கல்களுக்கு முகங்கொடுக்க வேண்டியவளாகவுள்ளாள். இவை விதண்டாவாதச் சர்ச்சை நோக்கிலான அவதானங்கள் அல்ல. நடுவுநிலையிலான கூர்மையான அவதானிப்பின்போது, பெண் கண்ணுக்குப் புலனாகாத ஒரு மாய வலையுள் அகப்பட்டிருப்பது தெரியவரும். இவை எவரால் எப்போது பிரேரிக்கப்பட்ட சட்டதிட்டங்கள் என்பது தெளிவில்லை. ஆனால், கடைப்பிடிக்கப்படவேண்டிய நியதிகளாகவுள்ளன.

மேலும், கற்கும் காலத்தில் ஆண் நண்பர்களைக் கல்வித்துணையாகக் கொண்டிருக்கும் வழக்கம், பாடசாலைப் பருவத்தில் அவதானிக்கமுடியாத ஒன்றாகவுள்ளது. ஆனால், உயர்கல்விப் பொழுதுகளில் இந்த வழக்கத்தையே- நாகரிக உச்சமாகக் கருதிக் கட்டவிழ்த்துவிடப்பட்ட விலங்குகளாக நடந்துகொள்வோரும் இல்லாமல் இல்லை.

சகமாணவர்களைத் தவிர, கல்வியூட்டும் ஆசிரியர்கள் அல்லது விரிவுரையாளர்களிடம் கற்கும்போதுகூட, பெண் மிக அவதானமாகத் தனது நற்பெயரைப் பேணிக்கொள்ளவேண்டிய பொறுப்புடையவளாக இருக்கிறாள். தொழில் பார்க்கும் நிறுவனங்களிலும்கூட ஆண் மேலதிகாரிகள், சக அலுவலர்களுடன் பழகும்போது, பெண் கண்ணுக்குப் புலனாகாத நெருக்கடியினை எதிர்கொள்கிறாள். சமூகம் எத்தருணத்திலும், ஒரு பெண்மீது எச்சில் உமிழத் தயாராகவே உள்ளது.

**வீடுதலைக் குருவி!
வீடுதேடி வந்தாய் நீ வாழி.
நின் அலகிதழில்
இருள் துயரெல்லாம் கிழிபடுகிறது
சிட்டுக் குருவி
எட்டுத்திக்கும் பறந்தொரு சேதிசொல்
வீட்டுவிடுதலையானோம் நம்
கட்டுக்கள் யாவும் அறுந்தனவாமென்று.**

என்ற சு.வில்வரத்தினம் அவர்களது அழகான வரிகளை, பெண்ணிலைத் தளைகள் பற்றிச் சொல்லும்நிலை நிச்சயமாகக் கிட்டத்தில் இல்லை. துரதிர்ஷ்டவசமாக, மரபுகளைத் தளர்த்த எண்ணும் பெண்கள், அதிசுயாதீனப் போக்கில் 'தான்தோன்றித்தனமாக' நடந்துகொள்வதும் உண்டு. இதனை உயர்நிலைக் கல்வியைத் தொடர்கின்ற சில பெண்களிடம் அவதானிக்கலாம். சகபெண்களே சகித்துக் கொள்ளமுடியாத அளவுக்கு, அவர்களின் 'விட்டு விடுதலை'யான இயல்பு காணப்படுவதுண்டு.

உரிமைகளை எடுத்துக்கொள்வது என்பது- மிகுந்த பொறுப்புணர்வுடன், சமூக வரம்புகள் பற்றிய பிரஞ்ஞையுடன் செய்யப்படவேண்டிய கட்டுப்பாடாகும். ஒவ்வொரு ஆணும், பெண்ணும் பதிக்கின்ற சுவடுகளில் சமுதாயலயம் ஒன்றியிருத்தல் அவசியம். காலங்காலமாகச் சமூகம் இசைத்துவருகின்ற சுருதியைத் தாண்டும்போது, மகத்தான பொறுப்புணர்வு அவசியமாகிறது. பெண்களின் மீதான தளைகளிலிருந்து மீளுவதான பாவனையுடன், ஆண்களைப் "போலச் செய்யும்" பாவனைகள் முட்டாள்தனமானதும், கேலிக்கூத்துக்கும் உரியனவேயன்றி வேறில்லை.

**உலக வாழ்க்கையின் நுட்பங்கள் தேரவும்
ஓது பற்பல நூல்வகை கற்கவும்
இலகு சீருடை நாற்றிசை நாடுகள்
யாவுஞ் சென்று புதுமை கொணர்ந்திங்கே
திலக வாணுத லார்நங்கள் பாரத
தேசமோங்க உழைத்திடல் வேண்டுமாம்
விலகி வீட்டிலோர் பொந்தில் வளர்வதை
வீரப் பெண்கள் விரைவில் ஒழிப்பராம்**

எனப் பாரதி பாடிய பெண்விடுதலையைக் காணுங்கள். அறிவினாலாய உலகை உருவாக்குவதில் அன்பினால், ஆற்றலினாலான புதிய தேசத்தைக் கட்டியெழுப்புவதில் பெண்களின் பங்கு மகத்தானது. பெண்கல்வி- சமூக முன்னேற்றத்தின் பிரதான படிமுறையாகும்.

பெண்களின் கல்வியுலக நெருக்கடிகளுள் பகிடிவதைகளும் சுட்டப்படத்தக்கன. உறவுகளை மேம்படுத்தும் போர்வையில், தமது வக்கிரத்தனமான நெறிபிறழ்ந்த நடவடிக்கைகளை வெளிப்படுத்தும் இந்த நடவடிக்கை சொற்களிருந்து செயல்கள்வரை காணப்படுகின்றது. இதிலுள்ள வேடிக்கை என்னவென்றால்- கல்வி அங்கீகாரத்தின் முன்னிலையில், கல்வியறிவற்ற பாமரமனிதனும் ஈடுபடத்துணியாத நிலைக்கு அல்லது அதனிலும் கீழ்ப்பட்ட விலங்குநிலைக்கு மனிதர்கள் இறங்கிவிடுவது தான். தகாதசொற்களை அல்லது செயல்களை 'படித்தவர்கள்' எனத் தம்மை பிரகடனப் படுத்தியுள்ளோரிடம் காண்பது இங்கொன்றும் கஷ்டமான காரியமாக இல்லை.

நா இழைத்த துயர் பற்றிய 'ரஷ்மி' இன் கவிதை கொடுஞ்சொல் பற்றிக் கூறும்.

**சொல்
உனக்கு என்போல் நாவில்லைத்தானே
வேரோடு
பிடுங்கி மண்ணுதரி
கொழுத்தும் வெயிற் கொதிமணலில்
வீசிய இளங்கொச்சிச் செடி ஒன்றே
எம்முகமும்
வாடிக்கறுத்தே வதங்கிச்
சுருளச் செய்ய
மனித நாக்கிற்கு இயலாதே
உன்னது
புடையனின் நாக்குத்தானே**

தகாத சொற்களை வீசும்போது, உண்மையில் விஷங்கக்கும் பாம்புகளாகவே மனிதர்கள் உள்ளார்கள். சொல்லத்தகாத வார்த்தைகளே சொல்பவர்களும், சொல்லவைப்போர்களும் ஒரு உண்மையைத் தெளிவாகத் தெரிந்து கொண்டாகவேண்டும். உண்மையில், அவர்கள் மனநிலைப் பிறழ்வு உடையவர்கள் என்பதே அது. சாதாரணமாக வீதிவழிச் செல்லும்போது - பெண்கள் மீது தீயவார்த்தைகளை வீசிச்செல்லும் ஆண்கள், தமது வீடுகளில் இதனை வெளிக்காட்டிக் கொள்வதில்லை. தமது உளப்பிறழ்வைத் தம்முன் கட்டுப் படுத்த வல்லவர்களாக இவர்கள் இருக்கிறார்கள். அத்துடன், பெண்கள் தம்மேல் சொல்லப்பட்ட வசைமொழிகளை மீட்டுச் சொல்லும் துணிவினைக் கொண்டிருக்கவில்லை. எனவே, தீர்க்கமுடியாத சிக்கலாக இது தொடர்ந்து கொண்டிருக்கிறது.

சில தகாத வார்த்தைகளின் தொடர்ச்சியாகவுள்ள தேவி பாரதியின் கவிதை காணுங்கள்.

..................
..................
..................

**சொல் இந்த வார்த்தைகளை உனது
தாய்க்கும் சகோதரிக்கும்
குழந்தைகளுக்கும்
முன்னர்
ஒரு போதும் உச்சரிக்கத் துணியாதவார்த்
தைகளை
இங்கு எப்படி உச்சரித்தாயோ அப்படியே
இன்னும் அப்பட்டமாக, இன்னும் உரக்க
எல்லோரையும் வட்டமாக உட்கார்த்தி
வைத்து
ஒரு வேடிக்கைக் கதை போலச் சொல்
வேண்டுமானால்
கறுப்புத் துணிகளால் எல்லோரும்
முக்காடிட்டுக் கொள்ளுங்கள் ஒருவர்
முகத்தை
ஒருவர் பார்த்து விடாதிருக்கும் பொருட்டு.**

பெண்களின் மீது வன்முறை வெறும் பார்வையிலே நிகழ்த்தப்படுதலும் உண்டு. பின்னர் - அது சைகைகளாக, சொற்களாக, செயல்களாக விரிகின்றது. செயல்களின் வடிவில் அவற்றைக் காணும்போது மட்டும், தண்டனைகள் வழங்கப்படுகின்றன. எனவே, செயல் நிலைப்படாத முன்னிலைகளிலாவது தம்மைப் "பேணிக்கொள்ளும்"

### விட்டு விடுதலையாகுவது எப்போது?

ஆர்வம் மக்கள் மத்தியில் உண்டு. பெரும்பாலும் 'அடையாளம் காணமுடியாத சந்தர்ப்பங்களில் அரங்கேறும் நிகழ்வுகள் இவை. எச்சில் உமிழ்வதுபோல, வார்த்தைகளைத் துப்பிச்செல்பவர்கள் - அதேவார்த்தைகளை உங்கள் நெருங்கிய உறவுகளிடம் சொல்லிப்பாருங்கள் அல்லது நீங்கள் மனித நிலையிலிருந்து வழுக்கிக் கீழ்நிலைப்பட்டுள்ள நிலையையாவது, அவர்களுக்குத் தெரியப்படுத்துங்கள்' என்கிறார் தேவி பாரதி.

**பெண்களும் குழந்தைகளும் நமபுகிறார்கள்
தாங்கள்
தகப்பனோ, சகோதரனோ, கணவனோ
அல்லது மகனோ இந்தக் கொடுமைகளில்
பங்கேற்பதில்லை என.
எவரேனும்
உண்மையில் கரங்கொண்டு
அவர்களது அறியாமையின் முகத்தில்
ஒரு குத்து விடுங்கள். இந்த நூற்றாண்டின
இறுதிக்குள்ளாவது அவர்கள் தெரிந்து
கொள்ளட்டும்.**

அமைதியான பெண்ணின் மீதான நெருக்கடிகள் சில கண்டோம். ஆக்ரோஷமான பெண்ணின் முகங்களை மறுபயணத்தில் எதிர்கொள்வோமாக.

(பயணம் தொடரும்)

## நகங்கள் அழகாக இருக்க

- நகங்கள் அழகாக இருக்க, நகங்கள் வெட்டுவதற்கு முன் தேங்காய் எண்ணெய்தடவிய பின்பு வெட்டினால் சுலபமாக வெட்டமுடியும்.
- நகத்தில் கறை இருந்தால், எலுமிச்சம் பழத்தோலினைத் தேய்த்தால் கறை அகன்றுவிடும்.
- வெதுவெதுப்பான சுடுநீரிலே உப்புத்தூளைப் போட்டு, அதில் விரல்களை சில நிமிடங்கள் வைத்திருந்தால் - நகங்கள் அழகாகவும், விரலில் சோர்வும் நீங்கும்.
- நகம் வெட்டும்போது நேராக வெட்டாமல், வட்டவடிவமாக வெட்டுதல் வேண்டும்.
- கட்டையான நகங்களை உடையவர்கள், ஒரேஞ் நிற நெயில் பொலிஷை உப யோகிப்பது நல்லது.

## லில்லிப் பூ LILY



**தேவையான பொருட்கள்**

ஸ்ரொக்கிங் நெற் - Pink
Gold கம்பி
மகரந்தம்
Flower tape
கட்டுக்கம்பி
பனையோலை,
கோழிச்சாயம் - பச்சை

**செய்முறை:**

லில்லிப் பூ செய்வதாயின், 7 அங்குலத்தில் 6 Gold கம்பிகளை அளவாக வெட்டவும். பின் அதன் இரு அந்தங்களையும் சேர்த்து முறுக்கிய பின், அக்கம்பிகளின் நுனியின் இரு பக்கங்களிலும் ஒரு வளைவு (உள்பக்கமாக) ஏற்படும் வண்ணம் செய்யவும். பின் அவற்றுக்கு ஸ்ரொக்கிங் நெற்றால் இறுகக்கட்டவும். அதன் பின், ஒவ்வொரு இதழ்களின் மேலும் ஒவ்வொரு மகரந்தத்தை வைத்துக்கட்டவும், அவற்றைச் சேர்த்துக் கட்டும்போது, ஒவ்வொரு இதழின் பின்னும் வைத்து கட்டிய பின், வெளிப்பக்கமாக வளைத்துப் பின் கம்பிக்கு Flower tape சுற்றவும். இதன் மொட்டுச் செய்வதாயின் - அதேமாதிரி அளவுகளைக்கொண்டு, வெட்டிக் கட்டியபின், உள்வளைவாகக் கம்பியை வளைக்கவும். இதன் இலையைப் பனையோலையில் சாயம் போட்டு, இலையின் உருவில் வெட்டியெடுத்துக் கம்பியில் வைத்துக்கட்டி Flower tape சுற்றவும். இதனை ஒழுங்குபடுத்தும்போது, இலைகளைக் கீழேயும், மொட்டுக்களை மேலுமாக வைக்கவும். அதன்பின் பூவினைவைத்து, ஒழுங்குபடுத்தி ஓர் ஒழுங்கமைப்பான பூங்கொத்தைப் பெறமுடியும்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*நயன்இலன் என்பது சொல்லும் பயன்இல*
*பாரித்து உரைக்கும் உரை.*

*திருக்குறள்.*

# நமது நோக்கு

## றொக்ஸியும் நம்பியாரும்!

யாழ்.குடாநாட்டில் படையினரால் அமைக்கப்பட்டுள்ள உயர்பாதுகாப்பு வலயங்கள் விவகாரத்தை - இராணுவ ரீதியில் அல்லாது மனிதாபிமானப் பிரச்சினையாகவே நோக்கவேண்டுமென வலியுறுத்தியிருக்கிறார் - தென்னாபிரிக்காவின் முன்னாள் இராணுவ அதிகாரியான றொக்ஸி வில்லியம்.

உயர்பாதுகாப்பு விவகாரங்களில் நம்பியாரின் ஆலோசனைகள் பற்றிய அதிருப்தியையும் வெளியிட்டுள்ள அவர்,

மக்களின் இயல்பு வாழ்க்கையைப் பாதிக்காத வகையிலும், சமாதான முயற்சியை வலுப்பெறச் செய்யும் வகையிலும் அரசு - இந்த உயர் பாதுகாப்பு வலயப் பிரச்சினையை அணுகவேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

றொக்ஸி வில்லியத்தின் இக்கருத்துக்களை ஒத்ததாகவே தமிழ் மக்களின் ஏகோபித்த குரலும் இருப்பது பிரதானமாகக் கருத்தில் எடுக்கப்பட வேண்டியது ஒருபுறமிருக்க-

ஒரு இராணுவ நிபுணர் என்ற ரீதியில் மக்களது அவலங்களையும் - பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் மக்களது அடிப்படை உரிமைகள் பறிக்கப்படுவதையும் உணர்ந்துகொண்டவராக அவர் பேசியிருப்பது - இங்குள்ள நிலைமைகளைப் பொறுத்தமட்டில் மகிழ்ச்சி தரக்கூடிய வியப்பானதொரு விடயமாகும்.

ஏனெனில் - ஏற்கனவே உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாக அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்கவென அழைக்கப்பட்ட இந்திய இராணுவத்தின் ஓய்வுபெற்ற உயர் அதிகாரியான சதஷ் நம்பியார், இடம்பெயர்ந்து வாழும் பல்லாயிரக்கணக்கான மக்களின் அவலநிலையைக் கருத்திற்கொள்ளாது - பாதுகாப்பு வலயத்தை தனியே மனிதாபிமானக் கண்ணோட்டத்தோடு பார்க்க முடியாது என மறுத்துச் சென்றதும் -

பின்னர், தனது அறிக்கைகளில் - பாதுகாப்பு வலயத்தை தளர்த்துவதற்கு - விதண்டாவாதமும் பொருத்தமற்றதுமான நிபந்தனைகளை விதித்துமிருக்க,

தென்னாபிரிக்காவின் இராணுவ நிபுணர் - தற்போது வெளியிட்டிருக்கிறன்ற கருத்துக்கள், சதீஷ் நம்பியாரின் உள்நோக்கங்களை மேலும்மேலும் சந்தேகங்களுக்கு ஆளாக்கவே செய்கின்றன.

சதீஷ் நம்பியார் - பொதுவான, நியாயமான தன்மையிலிருந்து விலகி - இராணுவ நலன் சார்ந்ததும், பிராந்திய அரசியல், படைப்பலச் செல்வாக்கின் எல்லைக்குள் நின்றுகொண்டும் - யாழ்.குடாநாட்டின் பாதுகாப்பு வலயங்களை ஆராய்ந்திருப்பது, றொக்ஸி வில்லியத்தின் நிலைப்பாட்டிலிருந்து அவர் முற்றாகவே விலகி நிற்பதைத் தெளிவாக்குகின்றது.

றொக்ஸி வில்லியம் - ஒரு இராணுவ அதிகாரியாக இருந்து, யுத்த சூழ்நிலையில் பாதுகாப்பு வலயங்கள் இருப்பதை அவர் அனுமதிக்கின்றபோதும் -

சமாதானச் சூழ்நிலையில் அல்லது அமைதிக்கான வழிமுறைகளில் பாதுகாப்பு வலயங்களின் தேவை பற்றி அவர் வினா எழுப்புவது - அவரது நடுநிலைத் தன்மையையே எடுத்துக்காட்டுகின்றது.

இந்த வகையில் - சதீஷ் நம்பியாரின் நடுநிலைத் தன்மை, அவரே நியாயப்படுத்துவது போலவன்றி பக்கச் சார்பானதாகவே அமைவதுடன்,

அமைதி வழிமுறைக்கான ஊக்கம் தருவதிலோ அல்லது சமாதானத்தை உறுதிப்படுத்தக்கூடிய முயற்சிகளிலோ சதீஷ் நம்பியார் நாட்டமின்றி இருந்ததையும் இதனூடே ஒப்பிட்டு அறியமுடிகின்றது.

அதேவேளை, சதீஷ் நம்பியாரின் அறிக்கைகளை - ஆலோசனைகளை முதன்மைப்படுத்தும், முக்கியத்துவப்படுத்தும் அரசாங்கமும் படைத்தரப்பும் - றொக்ஸி வில்லியம் போன்றோரின் கருத்துக்களைச் செவிமடுக்காமலிருப்பதும் விந்தையானதே.

பாதுகாப்பு வலயங்கள் விவகாரத்தில், இராணுவ நிபுணர்களின் ஆலோசனை என்ற பேரில் - தமது நிலைப்பாட்டை ஆதரிக்கக்கூடிய, தமக்கோ, படைத்தரப்புக்கோ நெருக்கடிகளைத் தராத, மக்களின் பக்கம் நின்று பிரச்சினைகளை நோக்கமறுக்கின்ற - கையாட்களைத்தான் அரசாங்கம் நாடுகிறது என்ற குற்றச்சாட்டும் இதன் மூலம் தெளிவாகிறது.

அதேவேளை - பாதுகாப்பு வலயங்களை அகற்றுவதற்கு 'மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போட்டு' - விடுதலைப் புலிகளின் கனரக ஆயுதக்களைவு பற்றியும், நீண்டதூர எறிகணைகளின் பின்நகர்த்தல் தொடர்பாகவும் சதீஷ் நம்பியார் முன்வைத்த நிபந்தனைகளை றொக்ஸி வில்லியம் நிராகரித்திருப்பதன் மூலம் - சதீஷ் நம்பியாரோ, அல்லது அவரது இயங்குதளமோ - உண்மையில் எவற்றினை விரும்பியிருக்கக்கூடும் என்ற சூட்சுமமும் பகிரங்கமாயிருக்கிறது.

எனவே - இனியும் தொடர்ந்து நம்பியாரின் ஆலோசனைகள் பற்றி அரசாங்கம் பேசுவதற்கு முயற்சிக்குமாயின்- அது, உண்மையிலேயே தமிழ் மக்களை அப்பட்டமாக ஏமாற்றும் உத்தியேயன்றி வேறெதுவுமல்ல என்பதைத்தான் றொக்ஸி வில்லியமின் அபிப்பிராயங்கள் சொல்லாமல் சொல்கின்றன.

இந்நிலையில் - மக்களின் தரப்பிலிருந்து பேசியிருக்கும் றொக்ஸி வில்லியத்திற்கு, தமிழ் மக்களின் நன்றியறிதல்கள் உரித்தாகட்டும்.

## பிரதமரின் பதவியேற்பு வைபவத்தை

# ரி.என்.எல் படம்பிடிக்காது தடுக்குமாறு ஜனாதிபதியே உத்தரவிட்டிருந்தார்!

## முன்னாள் பாதுகாப்பு அதிகாரி சாட்சியம்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவியேற்ற வைபவத்தை - ரி.என்.எல் தொலைக்காட்சி நிறுவனம் ஒளிப்பதிவு செய்வதற்கு ஜனாதிபதியின் உத்தரவுக்கு அமையவே, ஜனாதிபதி மாளிகைக்குள் ஒளிப்பதிவாளர்களைச் செல்லவிடாது தடுத்ததாக - ஜனாதிபதியின் முன்னாள் பாதுகாப்பு அதிகாரி நிஹால் கருணாரத்ன நீதிமன்றில் தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற வைபவத்தை ஒளிப்பதிவு செய்வதற்குத் தடுக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக, தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை மனித உரிமை வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேற்படி நிகழ்வை ரி.என்.எல். ஒளிப்பதிவு செய்வது தடுக்கப்பட்டதுக்கும் தமக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை என்றும், தாம் ஜனாதிபதியின் உத்தரவையே நிறைவேற்றியதாகவும் அவர் கூறினார்.

இதேவேளை, ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவிலிருந்து பிரதிப் பொலிஸ் மா அதிபர் தரத்திலான உயரதிகாரி ஒருவரும்- ரி.என்.எல். தொலைக்காட்சிச் சேவையோடு 'சண்டே லீடர்', 'ராவய' ஆகிய பத்திரிகைகளைச் சேர்ந்த செய்தியாளர்களையும், பிரதமர் பதவியேற்ற நிகழ்வில் தகவல் சேகரிக்க- ஜனாதிபதி மாளிகைக்குள் செல்ல அனுமதிக்கவேண்டாம் என்று விடுக்கப்பட்ட உத்தரவையே தாம் நிறைவேற்றியதாகத் தெரிவித்துள்ளார்

**கொழும்பு-வவுனியா கடுகதி ரயில்**

## இடைநிறுத்த எடுத்த முடிவு குறித்து விசாரணை நடத்த பிரதமர் பணிப்பு

கொழும்பு - வவுனியா கடுகதி ரயில்சேவையை இடைநிறுத்த எடுக்கப்பட்ட தீர்மானம் குறித்து விசாரணை செய்யுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

போதிய வருமானம் இல்லாமையால், இந்த ரயில்சேவையை எதிர்வரும் திங்கட்கிழமை முதல இடைநிறுத்த, ரயில்வே திணைக்களம் தீர்மானித்திருந்தது.

தினமும் நூற்றுக்கணக்கான பயணிகள் பயணஞ்செய்யும் இந்த ரயில் சேவை, இடைநிறுத்தப்படுவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானம் குறித்தே, விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பணித்துள்ளார்.

இதேவேளை - கொழும்புக்கும், கம்பஹாவுக்கும் இடையில் வாரஇறுதியில் மேற்கொள்ளப்பட்டுவந்த ரயில்சேவை ஒன்றும், போதிய வருமானமின்மையால் இடைநிறுத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## முரசொலிமாறன் இறந்துவிட்டாரா? இல்லை என்கிறது இந்தியத் தூதரகம்!

இந்திய மத்திய அமைச்சரும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் கலைஞர் கருணாநிதியின் மருமகனுமான முரசொலிமாறன், அமெரிக்காவில் மரணமானதாகச் செய்திகள் வெளியானபோதும், அமெரிக்காவிலுள்ள இந்தியத் தூதரகம் இந்தத் தகவலை மறுத்துள்ளது.

இந்திய மத்திய அமைச்சர் முரசொலிமாறன் இருதய நோயினால் பாதிக்கப்பட்டு, சிகிச்சைக்காக அமெரிக்காவுக்குக் கொண்டு செல்லப்பட்டிருந்தார். அங்கு அவருக்குப் பல மாதங்களாகச் சிகிச்சை வழங்கப்பட்டபோதும், அவர் தொடர்ந்தும் சுயநினைவற்ற நிலையிலேயே இருந்து வருகிறார்.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் மாலை, முரசொலிமாறன் இறந்துவிட்டதாகச் செய்திகள் வெளியாகியிருந்தன. ஆனால், முரசொலிமாறன் இறந்ததாக வெளியான செய்திகளை- அமெரிக்காவிலுள்ள இந்தியத் தூதரகம் மறுத்துள்ளது. அதேவேளை, முரசொலிமாறனின் உடல்நிலை கவலைக்கிடமாக இருப்பதாக, இந்தியத் தூதரகம் மேலும் தெரிவித்துள்ளது.

# சிறுவர் துஷ்பிரயோக வழக்குகளை விசாரிக்கத் தனியான நீதிமன்றங்கள்!

சிறுவர் பாலியல் துஷ்பிரயோகங்கள் மற்றும் சிறுவர்கள் மீதான குற்றச்செயல்களை விசாரணை செய்வதற்கென, விசேட நீதிமன்றங்களை உருவாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதுவரை காலமும் சிறுவர்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் குற்றச்செயல்கள் தொடர்பாக, சாதாரண நீதிமன்றங்களிலேயே விசாரிக்கப்பட்டு வந்தது.

அதிகரித்துவரும் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகங்களைத் தடுப்பதற்கும், இத்தகைய குற்றச்சாட்டுக்கள் தொடர்பான வழக்குகளைத் துரிதமாகவும், அவதானமாகவும் விசாரிக்கவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்காக சிறுவர் துஷ்பிரயோகம் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரிக்க, விசேட நீதிமன்றங்களை அமைக்கும் யோசனைகள் அடங்கிய திட்டத்தை, நீதி அமைச்சர் ஜோன் அமரதுங்க அமைச்சரவையில் சமர்ப்பித்தார்.

இந்த யோசனைகளின் அடிப்படையில், மாகாண மட்டத்தில் சிறுவர்கள் துஷ்பிரயோகம் சம்பந்தமான வழக்குகளை விசாரிக்கும் உச்ச நீதிமன்றம் ஒன்று அமைக்கப்பட்டு நீதிவான்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

அத்துடன், இந்த நீதிமன்றங்களில் சிறுவர் பாதுகாப்புத் துறையில் விசேட பயிற்சிபெற்ற நீதிபதிகளே நியமிக்கப்படவுள்ளனர்.

இந்த நடவடிக்கையை முன்னெடுக்க, தேசிய சிறுவர் பாதுகாப்பு ஆணைக்குழு உதவும் எனவும் தெரியவருகின்றது.

புதிதாக அமைக்கப்படவுள்ள சிறுவர் பாதுகாப்பு நீதிமன்றங்கள் - உலகளாவியரீதியில் அங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்புச் சட்டங்களின்படியும், ஐ.நா. பாதுகாப்புச் சட்டங்களின் படியும் இயங்கும் என்றும், சிறுவர்களின் நலனைப் பாதுகாப்பதே இவற்றின் குறிக்கோளாக இருக்கும் என்றும் தெரியவருகின்றது.

# வெளிநாட்டவரின் விரல் அடையாளத்தை பிரான்ஸிலும் பதிவு செய்வதற்கு முடிவு!

(கொழும்பு)

பிரிட்டனைத் தொடர்ந்து பிரான்ஸும் தனது நாட்டுக்குள் வரும் வெளிநாட்டு உல்லாசப் பயணிகளின் கைவிரல் அடையாளங்களைப் பதிவுசெய்யத் தீர்மானித்துள்ளது.

வெளிநாட்டவர்களின் கைவிரல் அடையாளங்களைப் பதிவு செய்யும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் தீர்மானித்துள்ளது. இது தொடர்பான சட்ட அங்கீகாரத்தைப் பெறுவதற்காக, ப்ரெஞ்சு நாடாளுமன்றத்தில் இந்த யோசனைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

வெளிநாட்டு உல்லாசப் பயணிகளிடமிருந்து திரட்டப்படும் கைவிரல் அடையாளங்கள் பிரான்ஸிலுள்ள தகவல் வங்கி ஒன்றில் சேகரித்து வைக்கப்படும். வெளிநாட்டவர்கள்- பிரான்ஸிலிருக்கும்போது குற்றச்செயல்களில் ஈடுபட்டால், அதை இலகுவாகக் கண்டுபிடிக்கவே இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

ஐரோப்பிய யூனியன், அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளைச் சேர்ந்தோர் பிரான்ஸ் நாட்டுக்குச் செல்ல விசா தேவையில்லை என்பதால், இந்த நாட்டவர்களின் கைவிரல் அடையாளங்கள் மட்டும் பதிவுசெய்யப்படமாட்டாது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

**ஜனாதிபதியின் பாதுகாப்பு அதிகாரங்கள்**

## குறைக்கும் சட்டத்துக்கு எதிராக உயர் நீதிமன்றில் வழக்கு தாக்கல்!

(கொழும்பு)

ஜனாதிபதியிடம உள்ள பாதுகாப்பு அதிகாரங்களைக் குறைப்பதற்கு அரசாங்கம் கொண்டுவரவுள்ள புதிய சட்டமூலத்துக்கு எதிராக - உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்வதற்குச் சட்டத்தரணிகள் சிலர் இரகசிய ஆலோசனையில் ஈடுபட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

ஜனாதிபதியின் பாதுகாப்பு அதிகாரங்களைக் குறைக்க, அரசாங்கம் புதிய சட்டமூலம் ஒன்றை நாடாளுமன்றத்தில் கொண்டுவர நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்தச் சட்டமூலம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவதைத் தடுக்குமாறுகோரி, உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது. இந்த வழக்கினைத் தாக்கல் செய்யும் முயற்சியில், சில சிரேஷ்ட சட்டத்தரணிகள் ஈடுபட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

## சுனில் மெண்டிஸ் குடும்பத்துக்கு வீடும் 10 லட்சம் ரூபா நஷ்டஈடும்!

**ஜனாதிபதி சந்திரிகா, அரசுக்கு உத்தரவு**

(கொழும்பு)

மேல்மாகாணசபையின் பொதுஜன ஐக்கிய முன்னணியின் உறுப்பினராக இருந்து சுட்டுக்கொல்லப்பட்டவரான சுனில் மெண்டிஸின் மனைவி மற்றும் இரு பிள்ளைகளுக்கும் பத்து லட்சம் ரூபா நஷ்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்தை ஜனாதிபதி சந்திரிகா பணித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலேயே - ஜனாதிபதி சந்திரிகா இந்த உத்தரவை வழங்கினார்.

அத்துடன், சுனில் மெண்டிஸின் குடும்பத்தினருக்கு, வத்தளை பிரதேசசபை எல்லைக்குள் அல்லது பொருத்தமானதொரு இடத்தில் தேசிய வீடமைப்பு அதிகாரசபை, வீடு ஒன்றை வழங்கவேண்டும் என்றும் ஜனாதிபதி சந்திரிகா உத்தரவிட்டார்.

# நாவலடிச் சந்திப் படைமுகாம் தொடர்ந்தும் விஸ்தரிப்பு!

மட்டக்களப்பு -வாழைச்சேனைக்கு அருகிலுள்ள நாவலடிச் சந்தியில் அமைந்துள்ள படைமுகாம் மேலும் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றது. இந்த முகாமின் எல்லை- மேலும் சுமார் ஐம்பது மீற்றருக்கு அப்பால் விரிவாக்கப்பட்டு, புல்டோசர்கள் கொண்டு மண் அணைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. அத்துடன், பாதுகாப்பு வேலிகள் புதுப்பிக்கப்பட்டும் வருகின்றன. காவலரண்கள், பதுங்குகுழிகள் என்பனவும் புதிதாக அமைக்கப்படுகின்றன.

மட்டக்களப்பு - கொழும்பு வீதியிலுள்ள படைமுகாம்கள் மற்றும் பொலிஸ் நிலையங்களுக்கு முன்பாகச் செல்லும் பிரதான வீதிகள்- புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின், பொதுமக்கள் பாவனைக்குத் திறந்துவிடப்பட்டன. எனினும், நாவலடிச்சந்தி தொடக்கம் மின்னேரியா வரையுமுள்ள படைமுகாம்களுக்கு ஊடாகச் செல்லும் பிரதான வீதிகள் - இதுவரை போக்குவரத்துக்குத் திறந்துவிடப்படவில்லை. பொதுமக்கள் உள்வீதிகள் ஊடாகவே பயணம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர்.

மட்டக்களப்பு நகருக்கு வடக்காக, மட்டக்களப்பு - கொழும்பு வீதியில் சுமார் 35 கிலோ மீற்றர் தொலைவில் திருமலை வீதி (வாகரை வீதி) பிரியும் இடத்தில் நாவலடிச்சந்தி உள்ளது.

இப்படைமுகாம் 1990 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. 23 ஆவது டிவிஷன் அமைந்துள்ள மின்னேரியாவுக்கும், 23-2 ஆவது படைப் பிரிவுக்கும் உட்பட்ட வாழைச்சேனை மற்றும் வாகரைப் பிரதேசத்திலுள்ள படைமுகாம்களுக்கும், 23-3 ஆவது படைப்பிரிவுக்குட்பட்ட மட்டக்களபபுப் பிரதேச படைமுகாம்களுக்கும் இந்த வீதியே - பிரதான விநியோகப் பாதையாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உள்ளூராட்சி வாரத்தையொட்டி மானிப்பாயில் போட்டிகள்!

(மானிப்பாய்)

மானிப்பாய் பாரதி சனசமூக நிலையம், எதிர்வரும் 14 ஆம் திகதி தொடக்கம் 20 ஆம் திகதிவரை உள்ளூராட்சி வாரத்தைக் கொண்டாடும் வகையில், பல போட்டிகளை நடாத்தவுள்ளது.

க.பொ.த. சாதாரண, உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு - 'சமாதானம் நிலைபெற வேண்டியதன் அவசியம்' என்ற தலைப்பில் பேச்சுப் போட்டியும், 'கலாசாரச் சீரழிவால் சமுதாயத்திற்கு ஏற்படும் தாக்கம்' என்ற தலைப்பில் கட்டுரைப் போட்டியும் நடத்தப்படவுள்ளது.

இதற்கான விண்ணப்பங்களை உடனடியாக நிலையச் செயலாளருடன் தொடர்புகொண்டு பெற்று, போட்டிகளுக்கு விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதைவிட - கரப்பந்தாட்டம், உதைபந்தாட்டம், கிரிக்கெட், தாச்சி, 100 மீற்றர், 1000- மீற்றர் ஓட்டம், வேகநடை, பலூன் உடைத்தல் போன்ற விளையாட்டு நிகழ்வுகளும்- சிரமதானம், கையெழுத்து மலர் வெளியிடுதல் போன்ற நிகழ்வுகளும் நடத்தப்படவுள்ளது.

# கொழும்பு துறைமுகம் ஊடாக ஐரோப்பாவுக்கு நேரடி கப்பல்!

(கொழும்பு)

கொழும்புத் துறைமுகம் ஊடாக ஐரோப்பிய நாடுகளுக்கான நேரடி கப்பற்சேவை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

ஜப்பானின் மிட்சுயி நிறுவனமும், சுவிற்சர்லாந்தின் யூரோஷிய கப்பல் கூட்டுத்தாபனமும் இணைந்து இந்தக் கப்பல் சேவையை ஆரம்பித்துள்ளன.

இந்தியா, பாகிஸ்தான், துபாய் ஊடாக ஐரோப்பாவின் பல்வேறு துறைமுகங்களைக் கடந்து, ஹம்பேர்க் துறைமுகத்துக்கு இந்தச் சேவை நடத்தப்படும். ஐந்து கப்பல்கள் இந்தச் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

இதன்மூலம், வருடாந்தம் 30 இலட்சம் கொள்கலன்கள் கொழும்புத்துறைமுகம் ஊடாகக் கையாளப்படும்நிலை ஏற்பட்டிருப்பதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

### வலி.தெற்குப் பகுதியில் முன்பள்ளி மாணவருக்கு சத்துணவுத் திட்டம்

(உடுவில்)

உள்ளூராட்சி வார நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு கட்டமாக வலி. தெற்குப் பிரதேசசபைக்குட்பட்ட முன்பள்ளி மாணவர்களுக்குச் சத்துணவு வழங்கும் திட்டம் அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதற்கமைவாக முன்பள்ளி நிறுவனங்கள் - மாணவர்களின் பெயர் விபரங்களை உடனடியாக வலி.தெற்குப் பிரதேசசபைக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

# மீராவோடை தமிழ்க் கிராமத்தில் மீள்குடியமர்வுக்கு நடவடிக்கை!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - மீராவோடைத் தமிழ்க் கிராமத்திலிருந்து 1990 ஆம் ஆண்டு வன்செயல்களை அடுத்து இடம்பெயர்ந்து, அகதிமுகாம்களில் தங்கியுள்ள 250 குடும்பங்கள்- 'நிகொட்' திட்டத்தின்கீழ் மீளக்குடியமர்த்தப்படவுள்ளன.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் மட்டக்களப்புக் கிளையின் ஊடாக, இந்த மீள்குடியமர்தல் திட்டத்தை செயற்படுத்துவதற்கென்று, முதற் கட்டமாக 5 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இடம்பெயர்ந்து வாழும் மீராவோடைத் தமிழ்க் கிராம மக்கள் - கல்மடு, கொண்டையன் கேணி, கறுவாக்கேணி ஆகிய கிராமங்களில் தற்போது அகதிகளாகத் தங்கியுள்ளனர்.

பற்றைகளால் மூடப்பட்டுள்ள மீராவேடைக் கிராமத்தை, துரித புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு, மீளக்குடியேற்றம் மேற்கொள்ளப்படுமென்று - தமிழர் புனர்வாழ்வுக்கழக மாவட்ட இணைப்பாளர் எஸ்.தேவராஜன் தெரிவித்துள்ளார்.

மீளக்குடியமரும் குடும்பங்களுக்கு - வீடமைப்பு உதவி மற்றும் சுயதொழிலை ஆரம்பிப்பதற்கான உதவிகளும் வழங்கப்படுமென்று தெரிவிக்கப்படுகின்றது.

# சிப்பாய் மீது கொன்ஸ்டபிள் பழிவாங்கும் தாக்குதல்!

மட்டக்களப்பு இராணுவக் காவலரணில் கடமையாற்றும் இராணுவச் சிப்பாய் - ஏறாவூர் பிரதேசத்தில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிக் காயமடைந்தார்.

ஹனிபா முகமட்தம்பி நசீர் என்ற சிப்பாயே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிக் காயங்களுடன் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

இது சம்பந்தமாக ஏறாவூர்ப் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### மானிப்பாய் இந்து இரண்டாவது முறையாகவும் சம்பியன்!

யாழ்ப்பாணம் துடுப்பாட்ட சங்கத்தினால் நடாத்தப்பட்ட 16 வயதிற்குட்பட்டவர்களுக்கான துடுப்பாட்டப் போட்டியில், மானிப்பாய் இந்துக் கல்லூரி இரண்டாவது தடவையாகவும் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக்கொண்டது.

மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் - பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற இப்போட்டியில், 144 ஓட்டங்களை மானிப்பாய் இந்துக் கல்லூரி பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (101)


# பணிநிலை வேண்டுகை

ஆயப்பகுதியில் கீழ்வரும் பணிநிலைகளுக்குத் தகைமையுடையவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. தகைமையுடையவர்கள், தங்களது சுயவிபரமடங்கிய வேண்டுகைகளை 2003.07.20 ஆம் நாளிற்கு முன்னதாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும்.

பணிநிலை :- 01) ஆய உதவியாளர் (ஆண்கள்)
02) ஆய அலுவலர் (ஆண்கள்)

கல்வித் தகைமை:

பணிநிலை 01 : க.பொ.த (சா/த) பரீட்சைக்குத் தோற்றியிருத்தல் வேண்டும்

பணிநிலை 02 : க.பொ.த (உ/த) பரீட்சையில் ஏதாவது ஒரு பிரிவில் பரீட்சைக்குத் தோற்றியிருத்தல் வேண்டும்.

## நடுவப்பணியகம், ஆயப்பகுதி, கிளிநொச்சி.

(சி-1212)

# மொஸ்கோ வீதியில் வெடிகுண்டு; செயலிழக்க முயற்சித்தவர் பலி!



குண்டை அணுகும் நிபுணரையும், உள்ளே - குண்டு வெடிப்பதையும் படங்களில் காணலாம்.

ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில், பிரதான வீதி ஒன்றில் காணப்பட்ட வெடிகுண்டை செயலிழக்கச் செய்த போது - குண்டு செயலிழக்கச் செய்யும் படைப்பிரிவைச் சேர்ந்த நிபுணரொருவர் அக்குண்டு வெடித்ததில் ஸ்தலத்திலேயே பலியானார்.


ஒருவாரத்துக்கு முன்னர், இசை நிகழ்வு ஒன்றில் நடைபெற்ற குண்டு வெடிப்பில் 14 பேர் பலியான சம்பவத்தைத் தொடர்ந்து, இந்தக் குண்டுவெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. மொஸ்கோ நகரின் மத்தியிலுள்ள விடுதி ஒன்றினுள், கனமான மூடை ஒன்றுடன் பெண்ணொருவர் சந்தேகத்துக்கிடமான முறையில் உள் நுழைந்ததைக் கண்ட பொலிஸார், அப்பெண்ணைக் கைதுசெய்தனர்.

இதன்போது அப்பெண், மூடையை வீதியை நோக்கி எறிந்தார். மூடையை வெடிகுண்டு நிபுணர் பரிசோதிக்க முயன்றபோது, அது வெடித்ததில் அவர் உடல் சிதறிப் பலியானதுடன் - அருகிலிருந்த கட்டங்களின் கண்ணாடி யன்னல்களும் சிதறின. குண்டு தொலைவிலிருந்து இயக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதும் பொலிஸார், இப்பெண்ணுடன் காணப்பட்ட இளைஞனைத் தேடிவருகின்றனர்.

கைதான பெண் 22 வயதான செச்னிய யுவதி எனக் கூறப்படுகிறது. அதிகமான மக்கள் கூடியிருந்த விடுதி ஒன்றினுள் இப்பெண் உள்நுழைந்தபோது, அதிக பதற்றத்துடன் காணப்பட்டமையினாலேயே அவர்மீது சந்தேகம் ஏற்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

குண்டை, ஆரம்பத்தில் தானியங்கி இயந்திர மனிதனைக்கொண்டு பரிசோதித்தபோது எதுவும் நடைபெறவில்லை எனவும்- குண்டு செயலிழக்கும் நிபுணர் அதனைக் கையாள முற்பட்டபோதே அது திடீரென வெடித்தது எனவும் கூறப்படுகின்றது.

# பிரிட்டன் வீதி விபத்தில் 7 பேர் ஸ்தலத்தில் பலி!



பிரிட்டன் மஞ்செஸ்ட்டர் பிரதான வீதியில் நடைபெற்ற விபத்தில் சிக்கி ஏழு பேர் பலியாகினர். நேற்று அதிகாலை - மினி பஸ் மற்றும் வேறு மூன்று வாகனங்கள் ஒன்றுடன் ஒன்று மோதியதில் இந்த அனர்த்தம் ஏற்பட்டது. பலியானவர்களில் மூவர் பெண்கள். ஏனையோர் இளைஞர்கள். மேலும் இருவர் இச்சம்பவத்தில் படுகாயமுற்றனர்.

மினிபஸ்ஸில், உல்லாசப் பயணிகள் விமான நிலையம் நோக்கி சென்றுகொண்டிருந்தனர். அவ்வேளை - குறிப்பிட்ட மினிபஸ், கார் ஒன்றுடன் மோதி வீதிக்குக் குறுக்கே கிடந்தபோது, சிதறிய இவ்வாகனங்களுடன் அவ்வீதியால் வந்த, மேலும் இரு கார்களும் வந்து மோதியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# அமெரிக்கப் படைகளுக்கு ஈராக்கில் அச்சுறுத்தல்!

## ஒப்புக்கொள்கிறார் அமெரிக்க ஜனாதிபதி புஷ்



ஈராக்கில் அமெரிக்கப் படைகளுக்கு அச்சுறுத்தல் இருப்பதை தாம் ஏற்பதாக, அமெரிக்க ஜனாதிபதி புஷ் ஒப்புக்கொண்டுள்ளார். ஈராக்கில் இறுதியாக நடைபெற்ற தாக்குதலில் இரண்டு அமெரிக்கப் படையினர் பலியான சம்பவத்தைத் தொடர்ந்து புஷ்ஷின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

தனது ஆபிரிக்க விஜயத்தின் ஒரு கட்டமாக பொட்சுவானா சென்றுள்ள புஷ், அங்கு வைபவம் ஒன்றில் உரையாற்றுகையில் - ஈராக் தொடர்பாக தாம் இறுக்கமான போக்கையே கடைப்பிடிப்பதாகத் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் திக்ரிட் நகரில் அமெரிக்க இராணுவ வாகன அணி ஒன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில், இரண்டு படையினர் காயமடைந்தனர். இவர்களில் ஒருவர் பின்னர் மரணமானார். இதேபோன்று - மற்றுமோர் நகரில் நடைபெற்ற பதுங்கித் தாக்குதலில் ஒரு படைச்சிப்பாய் பலியானார்.

உலகவலம்

## ஈராக்கில் அழிவு ஆயுதம்; ரொனி பிளேயர் இன்னமும் நம்பிக்கை!

ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் நிச்சயம் உள்ளதாக பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் இன்னும் நம்புவதாக, பிரதமரின் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் உள்ளதான தவறான தகவலை முன்வைத்து- அந்நாட்டின் மீது அமெரிக்காவும், பிரிட்டனும் படையெடுத்ததாக குற்றச்சாட்டுக்கள் வெளிவரும் தற்போதைய நிலையில், பிரிட்டிஷ் பிரதமரின் இக்கருத்து வெளியாகியுள்ளது.

பேரழிவு ஆயுதங்கள் மட்டுமல்ல, அவற்றை தயாரிப்பதற்கான இரகசிய திட்ட நகல்களும் விரைவில் சிக்கும் என பிரிட்டிஷ் பிரதமர் நம்புவதாக, அவரின் பேச்சாளர் தெரிவித்தார்.

# மரணமான சகோதரிகளின் சடலங்கள் ஈரான் வந்தன



நீண்ட சத்திரசிகிச்சையின் பின்னர்- கடந்த செவ்வாயன்று, சிங்கப்பூரில் உயிரிழந்த ஈரானிய இரட்டைச் சகோதரிகளின் சடலங்கள் ஈரான் வந்தடைந்தபோது, விமான நிலையத்தில் திரண்ட உறவினர்கள் கதறியழுத காட்சி நெஞ்சை நெருடுவதாக இருந்தது.

சடலங்கள், இறுதிச் சடங்குகளுக்காக அவர்களது சொந்த நகரான சிராஸ்சுக்கு எடுத்துச்செல்லப்பட்டன. ஒட்டியபடியே ஈரானை விட்டுச்சென்ற இந்த இரட்டையர்கள், தாம் கனவுகண்டபடி தனித்தனியாகப் பிரிந்து மீண்டும் ஈரான் திரும்பியபோதும்- உயிரற்ற சடலங்களாகவே அவர்கள் திரும்பியது அங்கு திரண்டிருந்த ஏராளமானவர்களை கண்ணீர் மல்கச் செய்தது.

விமானத்தில் வந்திருந்த, சத்திர சிகிச்சையை மேற்கொண்ட சிங்கப்பூர் வைத்திய நிபுணர்களை, ஈரானிய அதிகாரிகளும் இறந்த சகோதரிகளின் உறவினர்களும் அன்புடன் வரவேற்றனர். அவர்கள் உயிர் பிழைக்க குறைந்தளவு வாய்ப்பே இருந்தபோதிலும் - தமது பணியை துணிவுடன் மேற்கொண்டதாக அந்த வைத்திய நிபுணர்களை உறவினர்கள் பாராட்டினர்.


# நகரசபை, சாவகச்சேரி

## கேள்வி அறிவித்தல்

கீழே குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்விகள் என்னால் 28.07.2003 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அதேதினம் 10.30 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும்.

நிர்மாணப் பயிற்சி நிலையத்தில் (இக்ராட்) 'தரம் எம் 9' அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவுபெற்ற ஒப்பந்தக்காரர் மாத்திரமே கேள்விப் பத்திரங்கள் கோருவதற்கு தகைமையுடையவராவார்.

ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிலையத்தால் வழங்கப்பட்டதும் இற்றைவரை செய்யப்பட்ட வேலைகளின் விபரங்கள் அடங்கியதுமான பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

| | வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் ரூ. | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் (வற்றுடன்) ரூ. |
|---|---|---|---|
| 01. | நெல்லியடி முருகன் வீதி திருத்தம் | 2000.00 | 600.00 |
| 02. | மத்தியவீதி, 2ஆம் குறுக்குத்தெரு தொகுதி - 1 திருத்தம் | 1500.00 | 600.00 |
| 03. | யாழ். வீதி 2ஆம் ஒழுங்கை திருத்தம | 2200.00 | 600.00 |
| 04. | கண்டுவில் ஒழுங்கை திருத்தம் | 1500.00 | 600.00 |
| 05. | மத்திய வீதி 2ஆம் குறுக்குத் தெரு தொகுதி - 2 திருத்தம் | 1500.00 | 600.00 |

கேள்விப் பத்திரங்களை சாவகச்சேரி நகரசபை அலுவலகத்தில் 24.07.2003 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை மேற்குறித்த கேள்வி வைப்புப் பணத்தையும் கேள்விப் படிவக் கட்டணத்தையும் செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் படிவங்கள் இணைப் பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதி *'செயலாளர் நகரசபை, சாவகச்சேரி'* என்ற முகவரிக்கும், இணைப்பிரதி *'பி/உள்ளூராட்சி உதவி ஆணையாளர், செட்டித் தெரு, யாழ்ப்பாணம்'* என்ற முகவரிக்கும் 28.07.2003 ஆம் திகதி முற்பகல் 10.00 மணிக்கு முன்பு கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்படவேண்டும். உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்படவேண்டும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.


*நகரசபை அலுவலகம்,*
*சாவகச்சேரி,*
*10.07.2003*

மு.செ.சரவணபவ
செயலாளர்,
நகரசபை, சாவகச்சேரி.

(சி-1229)


# எயிட்சுக்கு எதிரான போருக்கு அமெரிக்கா உதவும் என உறுதி

## பொட்சுவானாவில் ஜோர்ஜ் புஷ்



பொட்சுவானா பழங்குடிகளுடன் புஷ்

(வொஷிங்டன்)

ஆபிரிக்காவுக்கான தனது ஐந்து நாள் விஜயத்தில் - தற்போது பொட்சுவானாவில் தங்கியுள்ள அமெரிக்க ஜனாதிபதி புஷ், ஆபிரிக்காவிற்கு எயிட்ஸ் நோயுடன் போராட அமெரிக்கா உதவும் என உறுதியளித்தார்.

பொட்சுவானா ஜனாதிபதி பெஸ்டஸ்மோகே அளித்த மதிய விருந்தில் கலந்துகொண்டு பேசியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். 'எயிட்ஸ், ஆபிரிக்காவின் கொடூரமான எதிரி. இந்த எதிரியை நீங்கள் தனியாக நின்று எதிர்க்கத் தேவையில்லை' என புஷ் அப்போது குறிப்பிட்டார்.

உலகில் எயிட்ஸ் பாதித்த நாடுகளில் பொட்சுவானா முன்னணி வகிக்கின்றது. இங்கு 10 பேருக்கு நால்வர் என்ற ரீதியில் எச்.ஐ.வி. வைரஸ் தாக்குதலுக்குள்ளானவர்கள் உள்ளனர்.

புஷ்ஷின் மனைவி லோரா, எயிட்ஸ் நோயாளிகளுக்கான வைத்திய சாலைக்கும் விஜயம் செய்தார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# பிரபாவை ஆஜராகுமாறு பத்திரிகையில் விளம்பரம்!

## மேல் முறையீட்டு நீதிமன்றில் பணிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை அடுத்த மாதம் எட்டாம் திகதி, மேல் முறையீட்டு நீதிமன்றில் ஆஜராகுமாறு, லேக்ஹவுஸ் பத்திரிகையில் விளம்பரம் ஒன்றினை பிரசுரிக்குமாறு மேல் முறையீட்டு நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் கடந்த வருடம் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட நான்கு மனுக்களை ஆராய்ந்த பின்னரே, மேற்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணி, சிஹல உறுமய, சிங்கள தேசிய சங்கம் மற்றும் திலக் கருணாரட்ன ஆகியோர் இந்த மனுக்களை நீதிமன்றில் தாக்கல் செய்தனர்.

இம் மனுக்களின் பிரதிவாதிகளாக - விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் குறிப்பிடப் பட்டிருக்கின்றனர்.

# இதுவரை நியமனம் கிடைக்காத தொண்டராசிரியர்களுடன் சந்திப்பு

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் - தொண்டராசிரியராக இருந்து நியமனம் கிடைக்காது, மேல் முறையீடு செய்த தொண்டராசியர்களுக்கான சந்திப்புகள், வலய ரீதியாக மாகாணக் கல்வி அமைச்சின் உயரதிகாரிகளால் மேற்கொள்ளப்படவுள்ளது.

யாழ்ப்பாணம், தீவகம் வலய தொண்டராசிரியர்களை - எதிர்வரும் 14 ஆம் திகதி- யாழ். வலய அலுவலகத்தில் காலை 9 மணிக்கும், வலிகாம வலய தொண்டராசிரியர்களை- 15 ஆம் திகதி யாழ். இராமநாதன் கல்லூரியிலும், வடமராட்சி தொண்டராசிரியர்களை- வடமராட்சி வலய கல்வி அலுவல கத்திலும், தென்மராட்சி தொண்டராசிரியர்களை - 16 ஆம திகதி சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் அதிகாரிகள் சந்திக்கவுள்ளனர்.

## மேஜர் முரளி வெற்றிக்கிண்ண

# உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி கிளிநொச்சியில் ஆரம்பமானது

(கிளிநொச்சி)

மேஜர் முரளி ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி, கிளிநொச்சியில் நேற்று ஆரம்பமாகியது.

கிளிநொச்சி மத்திய விளையாட்டு அரங்கில் நேற்றுக்காலை 8.30 மணியளவில் ஆரம்பமாகிய இப்போட்டிகளில் - பதின்மூன்று வயது அணிக்கான ஆட்டத்தில் - திருமலை அணியை, மட்டக்களப்பு அணி 11:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

மற்றுமொரு போட்டியில் - சுவிஸ் நாட்டு அணி, வவுனியா அணியை 12:0 என்ற கணக்கில் வென்றது.

19 வயது அணிகளுக்கிடையிலான போட்டியில் - முல்லை அணியை, கிளிநொச்சி அணி 1:0 என்ற கோல் கணக்கில் வென்றது.

கனகபுரம் விளையாட்டரங்கில் நடைபெற்ற போட்டிகளில் - 15 வயது அணிக்கான ஆட்டத்தில் கிளிநொச்சி அணி, முல்லை அணியை 1:0 என்ற கோல் கணக்கிலும், 17 வயது அணிக்கான ஆட்டத்தில் - அம்பாறை அணி, வவுனியா அணியை 5:0 என்ற கோல் கணக்கிலும், 15 வயதுக்கான ஆட்டத்தில் - வவுனியா அணி, மன்னார் அணியை 5:1 என்ற கோல் கணக்கிலும், 17 வயது அணிக்கான ஆட்டத்தில் - திருமலை அணி, முல்லை அணியை 1:0 என்ற கோல் கணக்கிலும் வென்றது. இன்றும் ஆட்டங்கள் தொடர்கின்றன.

# நோர்வே பிரதமரிடம் விளக்கம்கோரி கதிர்காமர் கடிதம் அனுப்பினார்!

(கொழும்பு)

சமாதான முயற்சிகளின் ஜனாதிபதி சந்திரிகா கூடிய அக்கறை செலுத்தவேண்டும் என்று, நோர்வே பிரதமர் பொண்டவிக் தெரிவித்திருந்த கருத்துத் தொடர்பாக, விளக்கம் கேட்டு இரண்டு கடிதங்கள் அனுப்பியபோதும், எந்தப் பதிலும் கிடைக்கவில்லை என்று ஜனாதிபதி சந்திரிகாவின் ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக, நோர்வேத் தூதுவருக்கு நினைவூட்டல் கடிதம் ஒன்றையும், லக்ஷ்மன் கதிர்காமர் அனுப்பிவைத்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, இது தொடர்பான பதிலை உடனடியாகப் பெற்றுத்தருமாறு கோரியிருப்பதாகவும், இதனாலேயே நினைவூட்டல் கடிதத்தை எழுதுவதாகவும் லக்ஷ்மன் கதிர்காமர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## இரவுக் கடமை உத்தியோகத்தர் தேவை

யாழ். மாநகரசபை எல்லைக்குள் வசிக்கும் 40 வயதிற்குட்பட்ட க.பொ.த உயர்தர சித்திபெற்ற சொந்த மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர் (பத்திரிகைத்துறையில் முன் அனுபவம் விரும்பத்துக்கது) சகல ஆவணங்களுடன் 14.07.2003 திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நேரில் வரவும்.

நிர்வாக இயக்குநர்,
நமது ஈழநாடு.

# தமிழகத்திலிருந்து திரும்புவோர் ஆயிரம் ரூபா உதவி பெறுவர்

தமிழகத்திலிருந்து யாழ்.குடாநாட்டில் மீளக்குடியமர வருகை தரும் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும், தலா ஆயிரம் ரூபா உதவி நிதி வழங்கப்படவுள்ளது.

கடந்த கால யுத்த அனர்த்தங்களால், பாதுகாப்புத் தேடி யாழ்ப்பாணத்திலிருந்து தமிழகத்துக்குச் சென்று, அங்கு அகதிமுகாம்களில் வசித்துவரும் பல குடும்பங்கள்- நாட்டில் தற்போது இடம்பெறும் சமாதானச் சூழ்நிலையால், மீண்டும் யாழ். குடாநாட்டிற்குத் திரும்பி, மீளக் குடியமர்ந்து வருகின்றனர்.

தமிழகத்திலிருந்து யாழ். குடாநாட்டிற்கு வருவோரின் எண்ணிக்கை அண்மைக்காலமாக அதிகரித்து காணப்படுகிறது. இவ்வாறு - யாழ். குடாநாட்டிற்கு மீளக்குடியமர வருகை தரும் குடும்பங்களுக்கு, உடனடியாக ஏற்படும் செலவீனங்களை ஈடுசெய்யும் முகமாக, மேற்படி கொடுப்பனவினை - யாழ். செயலக புனர்வாழ்வுக் கிளை வழங்குகின்றது.

இக்குடும்பங்கள், யாழ். குடாநாட்டிற்கு வருகைதந்து மீளக்குடியேறிய பின்னர், தத்தமது கிராம சேவையாளர் பிரிவுகளுடன் இணைந்த பின்னரே - மேலதிக கொடுப்பனவுகள், மற்றும் நிவாரணங்கள் என்பன வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (லி)

### திலக் மாரப்பன இஸ்ரேலுக்கு விஜயம்!

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன இஸ்ரேலுக்கு, நேற்றுப் பயணமானார். உத்தியோகபூர்வ விஜயமாகவே இவர், இஸ்ரேல் செல்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக்கான இராணுவ உதவிவழங்கும் நாடுகளில் இஸ்ரேல பிரதான இடம்வகிப்பது தெரிந்ததே.

### ஆட்பதிவு திணைக்கள நடமாடும் சேவை

இதுவரை தேசிய அடையாள அட்டை பெறாதவர்களினதும், அடையாள அட்டைகளில் மாற்றம் செய்ய வேண்டியவர்களினதும் நன்மைகருதி - ஆட்பதிவுத் திணைக்களம், குடாநாட்டில் ஒவ்வொரு பிரதேச செயலக ரீதியிலுமாக நடமாடும் சேவை ஒன்றினை நடாத்தவுள்ளது.

இதன்படி - எதிர்வரும் 14 ஆம் திகதி - கோப்பாய், கரவெட்டி, பருத்தித்துறை பிரதேச செயலகங்களிலும், 15 ஆம் திகதி சாவகச்சேரி, மருதங்கேணி பிரதேச செயலகங்களிலும், 16 ஆம் திகதி - உடுவில், தெல்லிப்பளை, சண்டிலிப்பாய், சங்கானை பிரதேச செயலகங்களிலும், 17 ஆம் திகதி - வேலணை, ஊர்காவற்துறை, காரைநகர் பிரதேச செயலகங்களிலும், 18 ஆம் திகதி- நல்லூர், யாழ்ப்பாணத்திலும் இந்த நடமாடும் சேவை நடைபெறவுள்ளது.

## அமைச்சர்....

மாவைக் கைவிடுமாறு கோரியும், திஸநாயக்க அதற்கு மறுத்துவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. அமைச்சர் திஸநாயக்க முன்னர் சந்திரிகா அரசிலும், அமைச்சராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இடைக்கால...

என்று அவர் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளிக்கும் வகையில், கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் உரை நிகழ்த்தினார். மக்கள் விடுதலை முன்னணி இவ்வாறான இனவாதத்தைத் தூண்டும் நடவடிக்கைகளில் தொடர்ந்தும் ஈடுபட்டால், மீண்டும் நாட்டில் யுத்தம் ஏற்படுவதைத் தவிர்க்கமுடியாமல் போய்விடும் என்றும் அவர் அப்போது தெரிவித்தார்.

## ஜனாதிபதி...

சாட்டை நிரூபிக்கமுடியுமா என நாம் ஜனாதிபதி சந்திரிகாவை கேட்க விரும்புகிறோம். நாம் ஒருபோதும் வாளாவிருக்கப்போவதில்லை' என கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தர்.

## திருமலையில்...

படையினரின் பிரதிநிதிகளிடம் ட்ரக்கை ஒப்படைத்தார்.கடந்த ஆண்டு இறுதியில், ஆறு படையினர் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள கும்புறுப்பிட்டிப் பகுதிக்குள் வந்தபோது, அவர்கள் கைதாகிப் பின்னர் விடுவிக்கப்பட்டபோதும், ட்ரக் வண்டி அப்போது ஒப்படைக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## பாடசாலை...

பாடசாலையில் க.பொ.த உயர்தரம் பயிலும் மாணவனும் சேர்ந்து இப் படங்களை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்படங்கள் எடுக்கப்பட்டதன் நோக்கம் இதுவரை தெரியவரவில்லை. பாடசாலை மாணவியையும் மாணவனையும் குறிப்பிட்ட பாடசாலைகளின் அதிபர்கள் ஊடாக, விசாரணை செய்வதற்கான ஒழுங்குகளை விடுதலைப்புலிகள் மேற்கொண்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

# தேசிய விளையாட்டு விழா யாழ்ப்பாணத்தில் நடக்கும்

## விளையாட்டு அமைச்சின் பணிப்பாளர் கூறுகிறார்

(யாழ்ப்பாணம்)

தேசிய விளையாட்டுப் போட்டியாவும், திட்டமிட்டபடி யாழ்ப்பாணத்திலே நடைபெறுமென - விளையாட்டுத்துறை அமைச்சின் பணிப்பாளர் ஏ.எம்.மில்ரன் அமரசிங்க தெரிவித்துள்ளார்.

இவ்விளையாட்டு நிகழ்வுக்காக புனரமைக்கப்படும் துரையப்பா விளையாட்டரங்கையும், ஏனைய ஏற்பாடுகளையும் பார்வையிடுவதற்காக யாழ். வந்தபோதே - அவர், பத்திரிகையாளருக்கு இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சமூகங்களுக்கிடையிலான நல்லுறவை வளர்க்கும் வகையில் இம்முறை யாழ்ப்பாணத்திலேயே விளையாட்டு விழாவினை நடாத்துவதென, எமது அமைச்சு ஏற்கனவே திட்டமிட்டு, அதற்கான ஒழுங்குகளைச் செய்துவருகிறது. பெருந்தொகையான பணத்தை செலவழித்துவிட்டு- தற்போது வேறிடத்தில் விளையாட்டு விழாவை நடாத்த நாம் ஒருபோதும் தீர்மானிக்கவில்லை.

யாழ்ப்பாணத்தில் விளையாட்டு நிகழ்வில் பங்குகொள்ள - தென்பகுதி வீரர்கள் மகிழ்வுடன் காத்துள்ளனர். விளையாட்டின் மூலம் சமாதானத்தை கட்டியெழுப்பக்கூடிய சூழ்நிலை உருவாகும் என்ற நம்பிக்கை எமக்குண்டு எனவும் அவர் தெரிவித்தார்.

# யாழ்ப்பாணத்தில் தூதரக கிளை; அமெரிக்கத் தூதரகம் மறுப்பு!

அமெரிக்கத் தூதரகத்தின் கிளையொன்று, யாழ்ப்பாணத்தில் அமைக்கப்படவுள்ளதாக வெளியான செய்திகளுக்கு - கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் மறுப்பு வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அமெரிகத் தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரக அதிகாரிகள், இலங்கையின் அமைதி முயற்சிகளுக்கு ஊக்கமளிப்பதோடு, குடாநாடு உட்பட சகல பகுதிகளின் அபிவிருத்தியிலும் அக்கறை செலுத்தி வருகின்றனர்.

கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் அமெரிக்க ராஜாங்க அமைச்சர் றிச்சர்ட் ஆர்மிரேஜ்ஜும், கடந்த ஜுன் மாதம் யு.எஸ்.எய்ட் பிரதி நிர்வாகி பிரெட் வீக்கும் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்திருந்தனர்.

இதுபோன்றே, கொழும்பிலுள்ள தூதரக அதிகாரிகளும் வழக்கமான விஜயங்களையே - நாட்டின் ஏனைய பகுதிகளைப் போன்று யாழ்ப்பாணத்துக்கும் மேற்கொண்டு வருகின்றனர்.

வடக்கில் கண்ணிவெடி அகற்றும் தொண்டர் நிறுவனங்களுக்கு, அமெரிக்கா உதவிகளை வழங்கி வருகின்றது. சுமுகநிலையை ஏற்படுத்துவதற்கு - மக்களுக்கான சிறியளவிலான உதவித் திட்டங்களையும் அமெரிக்கா வழங்கிவருகிறது.

இந்த நிலையில், யாழ்ப்பாணத்தில் தூதரகம் ஒன்று அமைப்பது பற்றி நாம் சிந்திக்கவில்லை. யாழ்ப்பாண ஊடகங்கள் சிலவற்றில் வெளியான தகவல்களின் அடிப்படையில், தமிழ்நெற் இணையத் தளம் வெளியிட்ட செய்தி தவறானது என்றும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

# லொறியிலிருந்து குதித்தவர் அதனுடன் மோதுண்டு பலி!

(யாழ்ப்பாணம்)

ஓடும் லொறி ஒன்றில் இருந்து பாய்ந்து இறங்கிய இளைஞன், அந்த லொறியுடன் மோதுண்டே மரணமடைந்தார்.

புன்னாலைக்கட்டுவனில் நடைபெற்ற இச்சம்பவத்தில் - உரும்பிராயைச் சேர்ந்த துசிகாந்தன் (வயது 20) என்ற இளைஞனே மரணமடைந்தவராவார்.

பஸ்வண்டிக்காக காத்திருந்து, பஸ் வருவது தாமதமானதால், இந்த இளைஞன் குறிப்பிட்ட லொறியில் ஏறித் தனது பயணத்தை ஆரம்பித்தார். லொறியில் பயணம் செய்துகொண்டிருந்த சமயம், பஸ் வருவதைக் கண்டதும், அதிலிருந்து பாய்ந்து இறங்க முற்பட்ட சமயமே இப்பரிதாப சம்பவம் நிகழ்ந்தது. (09,11)

## சமாதான முயற்சி தொடர்பான

# அரசின் விளக்க கூட்டத்தை எதிர்க்கட்சிகள் பகிஷ்கரிப்பு

(கொழும்பு)

சமாதான முயற்சிகள் குறித்தும், நாட்டின் தற்போதைய நிலை குறித்தும் விளக்கமளிக்கும் அரசின் கூட்டம் ஒன்று கொழும்பில் நேற்று நடைபெற்ற சமயம், முக்கிய எதிர்க்கட்சிகள் எவையும் அதில் கலந்துகொள்ளவில்லை.

நாடாளுமன்ற கட்டடத்தில் நேற்று நடைபெற்ற இக்கூட்டத்தில் -ஜே.வி.பி உட்பட, பொதுஜன ஐக்கிய முன்னணி, தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஆகிய எந்தக் கட்சியும் அதில் கலந்துகொள்ளவில்லை.

இக்கூட்டத்தின்போது இடைக்கால நிர்வாகம் குறித்தும், நடைபெற்றுவரும் சமாதான முயற்சிகள் குறித்தும் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்- கூட்டத்தில் கலந்துகொண்ட ஆளுங் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மாத்திரம் விளக்கமளித்தார். (200,01)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 11.07.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.